அண்டரண்ட மாகிநின்ற வரனே காப்பு
    ஆனந்த மாகிநின்ற உமையாட் காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
    குமரகுரு வேல்முருகர் பாதங் காப்பு
புண்டரிக மாலதிரு மாலுங் காப்பு
    புகழ்பிரம முதநிகுலிச வைவர் காப்பு
சண்டமெனும் மாருதம்போல் வைத்தி யத்தில்
    சாற்றுகிறேன் போகருட பாதங் காப்பே (1)

சன்னிக்கு மேல் பூச தைலம்.

சேரேநீ சன்னிக்கு தயில மொன்று
    செப்புகிறேன் புலிப்பாணி விளக்க மாக
வீரேநீ வேப்பெண்ணெய் படிதா னென்று
    விதமான கார்த்திகையின் கிழங்கு தண்ணீர்
பாரேநீ படிதன்னி லைந்து வாரு
    பாங்கான கருநாபி விராக னொன்று
கூரேநீ வசம்பதுவும் விராக னைந்து
    கொடிதான வெள்ளுள்ளி விராக னைந்தே (6)

அஞ்சான காயமது விராகு னொன்று
　　அப்பனே ஓமமது விராக னைந்து
தஞ்சான சதகுப்பை விராக னைந்து
　　சாதிக்காய் வெந்தோன்றி விராகள் பத்து
மஞ்சான இதையெல்லாங் கிழங்கு நீரில்
　　மைந்தனே மைபோலே யரைத்துப் போடு
நஞ்சான எண்ணெயிலே கலக்கிக் கொண்டு
　　தயவாக கடுகுபதந் தன்னில் வாங்கே (7)

வாங்கியெண்ணெய் மேல்பூச சன்னி போகும்
　　வகையான குடைச்சல்முதல் வாதம் போகும்
பாங்கிய உள்ளுக்குக் கொடுக் கொணாது
　　பாங்காக மஞ்சளிட்டுச் சான மிட்டு
தாங்கியே நீரிட்டுக் கழுவிப் போடு
　　தயவாக இந்தவெண்ணெய் உறுதி மெத்த
ஏங்கியே யலையாதே யப்பா சொன்னேன்
　　இதமாக வயித்தியந் தானினைக் கேளே (8)

சூதக_வலிக்கு_உப்பு.

கேளேநீ சூதகத்தின் வலிதான் போக
கெடியாகச் சொல்லுகிறேன் வன்றாமிக் கேளு
வீளேநீ போகாம லுப்பைப வாங்கி
விதமான கரந்தையுட சாத்ரா லாட்டி
நாளேநீ காயவிட்டுப் புடத்தில் போட்டு
நாயகனே யிம்முறையா யைந்து தீரு
பாளேநீ போகாம லெடுத்துக் கொண்டு
பண்பான ஆண்செருப் படையின் சாறே (9)

சாற்றாலே யைந்துபுடம் போட்டா யானால்
சார்வாகச் செங்கனீறு போலே யாகும்
பார்த்தாலே குடோரியது இதந் கொவ்வாது
பஃபான சூதகத்தின் வலியே கண்டாய்
மாற்றாலே எலுமிச்சம் பழச் சாற்றாலே
மைந்தனே அகஸ்தியனார் குழம்பைக் கேளு
எற்றாலே பணவெடைதான் சாற்றிற் சேர்த்து
இதமாக உள்ளுக்கு கொடுத் திடாயே (10)

கொடுத்திடவே பேதியது அதிகங் கண்டால்
குணமாக வசம்புதனை காிக்கிக் கொண்டு
அடுத்திடவோர் படிசலந்தான் கூட வார்த்து
அடவாக எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு
கடுத்துடனே கொடுத்துவிடு பேதி நிற்கும்
கருவாகப் பத்தியமாய்க் காரு காரு
சடுத்தமில்லை பச்சாிசி பயற்றி னோடு
சார்வாகப் பத்தியந் தானுப் பாகாதே (11)

ஆகாது மற்றொன்று மாகா தப்பா
அடவாக மற்றாநாள் மருந்தைக் கேளு
சாகாத வெள்ளுள்ளித் தயிலம் வாங்கி
சாதகமாய்த் தட்டைடைதான் ஒன்றில் வார்த்து
நோகாது முன்சொன்ன சூப்பை மைந்தா
நோய்தீர விராகனொன்று பொடித்துப் போடு
போதாத சூதகமாம் வலிதான் தீர்
புகட்டிவிடு தயிலமதை கொடுத்தி டாயே (12)

கொடுத்திடுவா யிந்தமுறை நான் மூன்றப்பா
குணமாகப் பத்தியமாய்க் காக்கச் சொல்லு
அருத்திடுவாய் பச்சரிசி பருப்பி னோடு
அடவாக புனைப்பாக மாகக் காய்ச்சி
சடுத்தமில்லை கொடுத்துவிடு உப்பாகாது
சார்வாக வைந்தாநாள் தலைய மூழ்கு
நடுத்திடுவா யுப்பதுவும் வருத்துக் கட்டு
நலமாக மற்றாநா ளெல்லா மாமே (13)

பெரும்பாட்டுக்கு மருந்து.

ஆகுமேநீ பெரும்பாடு வந்த பேர்க்கு
அடவாக நாவல்பட்டை யெருமை மோரில்
தாமேநீ துவைத்திடித்துப் பிழிந்து கொண்டு
தயவான சந்தனந்தான் விராக னைந்து
நாமேதான் புளித்தமோர் தனிற் கலக்கி
நாயகனே கொடுத்துவிடு நான் மூன்றப்பா
வீமேநீ பெரும்பாடு எங்கே போச்சு
விதமாகப் பத்தியந்தா னில்லைத் தானே (14)

குன்மம் அறுக்கும் உப்பு.

ஞானேநீ குன்மவகை யாறுந் தீர
    தயவாக உப்பொன்று சொல்லக் கேளு
மானேநீ உப்பதுவும் படிதா னொன்று
    மைந்தனே யெருமைமோர் படிதா னொன்று
வானேநீ வரிக்குமட்டிச் சாறு நாழி
    வகையான இந்துப்பு வெடியுப்பு போடு
தேனேநீ சவுட்டுப்பு வளைய லுப்பு
    தெளிவாக வகைவகைக்கு விராக னொன்றே (15)

ஒன்றாக இதையெடுத்துப் பாண்டத் திட்டு
உத்தமனே மோருடனே சாறும் விட்டு
பன்றாக அக்கினி லெரிக்கும் போது
பதராம லப்பது சர்க்கரை போலாகும்
குன்றாகப் பாண்டத்தி லெடுத்து லர்த்தி
குணமாக உதயாதி அன்ன நீரில்
நன்றாக விராகனெடை உப்பு ரண்டு
நலமாகத்தான் போட்டுக் கொடுத்தி டாயே (16)

கொடுத்திடுவாம் மண்டலந் தானிந்த வீதம்
குணமாக அவரவர்க்கு நாள்தான் தவிரு
தொடுத்திடுவாம் வாயுவென்ற கட்டி போகும்
தொந்திப்பு சோகைபோம் பொரு மத்திரும்
படுத்திடுவாம் கவிசையொடு கிரிச் சினைகள்
பாழான கெண்டை முதற்பறந்து போகும்
கடுத்திடுவாம் அகவையென்ற கட்டிப் போகும்
கடலான உப்புடைய திறந்தான் காணே (17)

நீரடைப்புக்கு வாழைக் கிழங்கின் நீர்.

காணென்ற நீரடைப்பு கண்ட பேர்க்கு
கனிவாக வாழையுட கிழங்கைத் தோண்டி
ஊணேநீ மற்றுநாட் பார்க்கும் போது
உத்தமனே வாழையுள்ளே தண்ணீர் நிற்கும்
வீணேநீ போகாமற் கிழங்குத் தண்ணீர்
விதமாக அரைபடி தானெடுத்து வந்து
பூணேநீ வெடியுப்பு விராகன் ரண்டு
போட்டதிலே கொடுக்க நீர்க்கட்டுப் போமே. (18)

தலை_வியாதித்_தைலம்.

போமேதான் மெத்தலையின் வியாதி தீர
　　பொங்கமுடன் வெள்ளெண்ணெய்ப் படிதா னொன்று
தாமேதான் பசுவின்பால் படிதா னொன்று
　　தயவாகக் கம்பஞ் சோற்றின் நீரைவிட்டு
வேமேதான் ஆதொண்டை யிலையிற் றானும்
　　விதமாகத் தான்றுவைத் துச்சாறு நாழி
வாமேதான் மிளகுறவும் பலந்தான் ரண்டு
　　வளமாகத் தானரைத்துப் போட்டி டாயே (19)

போட்டதொரு மிளகுறவு மிதக்க மட்டும்
　　. பொங்கமுடனக்கினியி லெரிக்க வேண்டும்
நாட்டவே யிறக்கி வைத்து வடித்துக் கொண்டு
　　நலமான மிளகதனை யரைத்துக் கூட்டு
ஊட்டவே உதயாதி தடங்கு முன்னே
　　உத்தமனே தலைமுழுகு யமுது கொள்ளு
காட்டவே மண்டையிடி கண்ணுக் குத்து
　　காலமே முழுகிவர வோடிப் போமே (20)

ஒருதலை நோய்க்கு நசியம்

போகுமப்பா ஒருதலையின் வியாதி ரோகம்
பொங்கமுடன் சமுத்திராப் பழத்தை வாங்கி
ஆகுமப்பா பெருங்காயம் நேராய்ச் சேர்த்து
அடவான பெண்முலைப்பால் தன்னா லாட்டி
ஏகுமப்பா குளிகைபோல் செய்தக் கொண்டு
இதமான பெண்முலைப்பால் தனி லுரைத்து
வேகுமப்பா நாசியிலே விட்ட போது
விரண்டோடி அகன்றுவிடும் வீரந் தானே (14)

ஆக்கிரானம்

தானான ஆக்கிரானஞ் சொல்வேன் கேளு
தயவான சுண்டைவேர் சித்திர மூலம்
வானான அழிஞ்சிவேர் கண்டங் கத்திரி
வளமான ஸ்ரீ தவளை முளகறணை வேளை
மானான ஆடுதொடர் குப்பை மேனி
வளமான வெள்ளைச் சாரணையும் வேலி
பானான வகைக்கு வகைவிராக னொன்று
பண்பான எருக்கிலையுஞ் சுனையின் பாரே (351)

பாரேநீ சமுத்திராப் பழமுஞ் சுக்கு
பாங்கான அக்கிரா காரம் ஓமம்
சேரேநீ அதிவிடையம் அரத்தை காயம்
செயலான திப்பிலியும் திப்பிலி மூலம்
வீரேநீ தேசாவரங் கஸ்தூ ரி மஞ்சள்
வீறான வால்மிளகு கடல்நுரையுங் கடுகு
நீரேநீ குரோசானி யோமம் ரோகணி
திறமான கருஞ்சீரகம் பேரரத்தை காணே (352)

பீநசத்துக்குந் நசியம்.

வீரந்தானி லிலமொரு வூவாயந் கேரு
விதமான மாதளம்பூ அருக்கன் பூவுந்
காரந்தான் குங்குமப்பூ மூன்றும் நேராய்
கல்வத்திலாட்டி யிதைமுலைப் பால் விட்டு
சோரந் தானில்லாமல் நாசியிலே பிழிய
சோரியென்ற பீநசந் தானேமுந் தீரும்
பாரந்தானில் லையப்பா சூட்ச மாகப்
பாடினேன் புலிப்பாணி விளங்கத் தானே (25)

கண்படலந் தீர நாதிக் குளிகை

தானென்ற கண்ணில் படலந் தீர
தயவான மிளகுடனே சுக்குங் கட்டி
காளென்ற திப்பிலியுஞ் சங்குங் கூட
காியமால் தாரமுடன் புங்கம் வித்து
வேனென்ற அதிமதுரந் துத்தந் தோடு
விதமான பீதரோ கணியுங் கூட
பானென்ற மனோசிலையு மேனைக் கொம்பும்
பண்பான ஆமையுட வோடுங் கட்டே (28)

கூட்டப்பா புலிநகமும் வெள்ளி யோடு
    கொடிதாளை சேவலின் நெஞ்செலும்புங் கூட்டு
மூடப்பா இந்துப்பு இவையெல்லா நீதான்
    முறையாக ஒரெடையாம் சிறுத்தைக் கொண்டு
ஆட்டப்பா கல்வத்தில் நந்தி பத்திரி
    அடவாகச் சாறுவிட்டு ஒரு நாளாட்டு
சூட்டப்பா அதனுடைய பூச்சாறு தானே
    சொல்லடா ஒருநாள் தாளாட்டித் தீரே. (29)

தீர்த்தெடுத்துக் கயிறுபோல ருட்டிக் கொண்டு
        திறமாக நிமலலர்த்தி பதனம் பண்ணு
பாத்தெடுத்து தேனதிலே யுரைத்துப் போட
        படலமென்ற வகைகளெல்லாம் பறந்து போகும்
சார்த்தெடுத்த முலைப்பாலி லுரைத்துப் போட
        சார்வாக வீராறு நாளுக் குள்ளே
யீர்த்தெடுத்த ரத்நாதி குளிகை யென்பார்
        இருவிழியின் படலமெல்லாம் வாங்குந் தானே (30)

மாலைக் கண்ணுக்கு மை.

தாவென்ற மாலையுட கண்ணுக் கப்பா
        நயவான சுரண்டு சுட்ட சாம்பல்
வேவென்ற கல்வத்தில் போட்டுக் கொண்டு
        விதமான வெள்ளெண்ணெய் நீர்ப்பூண்டு சாறும்
பாவென்ற பருத்தியிலைச் சாறுங் கூட்டி
        பாங்கான வெள்ளுள்ளி மிளகு பத்து
வாவென்ற மைபோல ஆட்டிக் கொண்டு
        வளமாக அந்திசந்தி கண்ணில் போடே (31)

போடப்பா நால்ஜீக்கு போட்ட போது
    பொங்கமுடன் மாலைய தகல்து போச்சு
வீடப்பா விளக்கென்னெய் வார வீதம்
    விதமாக நாகலந்து முழுகும் போது
சாடப்பா அருந்ததி கண்ணிற் றோற்றும்
    சார்வாகக் கீழ்பார்வை கண்ணிற் காணும்
நாடப்பா போகருட கடாட்சத் தாலே
    நலமாகப் புலிப்பாணி பாடி னேனே (32)

கண்ணில் நீர்வடிதலுக்கு மை

பாடினேன் கண்ணில் நீர்வடிந்த தானால்

பரிவா கவரப்பலா யிலையோரி குத்து
நாடினேன் கருவேலி லிலையோரி குத்து
நலமான தான்றிக்காய் மாசிக் காயும்

சூடினேன் கடுக்காயுங் காசுக் கட்டி

சுகமாக வகைவகைக்கு விராகனொன்று

கூடினே விவையெல்லாம் பொடித்துப் போட்டு

குணமாக வேகவைத்துப் பிழிந்தி டாயே (33)

பிழிந்திடுவாய் கரண்டியிலே வேண மட்டும்

புளிதமுடன் அபினியது விராகன் கால்தான்

செழுந்திடுவாய் சீமைத பொரித்துக் கொண்டு

செயலான பொரியதுவும் விராகன் கால்தான்

குழிந்திடு வாயடுப்பிலே காயும் போது

கூசாமலா வரையின் குச்சி யாலே

சுழிந்திடுவாய் மைப்போலே கடை வாயப்பா

சுகமாக கண்ணை சுற்றி வழித்துப் போடே (34)

போடுமுன்னே புளியிலையை வேக வைத்து

பொங்கமுடன் கண்ணையு நீகருவிப் போட்டு

ஆடுமுன்னே இந்தஇலை வேத வைத்து

அடவாகப் போட்டவுடன் கண்ணீர் நிற்கும்

நாடுமுன்னே சிவப்பெல்லாம் வாங்கிப் போகும்

நலமான அழுகண்ணுந் தீரும் பாரு

கூடுமுன்னே யின்னமொரு வயித்தியந் தான்

குணமாகச் சொல்லுகிறேன் கேளு கேளே (35)

கண்வலிக்கெல்லாம்

கேளப்பா கண்ணுவலி வந்த பேர்க்கு
    கெடியான துளசி புன்னாக்கிலை யினோடு
சூளப்பா புளியிலை இந்த மூன்றுஞ்
    சுகமாகத் தட்டியதை துணியில் வைத்து
விளப்பா இல்லையடா கோளங் கட்டி
    விதமென்ன துளதுவும் விராகன் பத்து
பாளப்பா பழம்புளியைக் கரைத்து நீயும்
    பாங்கான கண்ணுக்குப் பிழிந்து பாரே (36)

பாரேநீ பொட்டணத்தைப் பிடிக்கச் சொல்லு
    பண்பாக நாலுதர மொருநாள் வாரு
சேரேநீ வார்த்தவுடன் வலிதா நீங்குஞ்
    சிறப்பாக நாள்மூன்று இந்தப் பாகம்
ஆரேநீ யைத்தாநாள் சொல்லக் கேரு
    ஆவரம்பூ தலையிட்டு முழுகச் சொல்லு
கூரேநீ கண்ணு வலியெங்கே போச்சு
    குருவான போகருட கடாட்சந் தானே (37)

தந்தவியாதிக்கெல்லாம்பொடி

தானேதான் தந்தமென்ற வியாதிக் கப்பா
தயவான அரப்பொடியும் பலந்தா னொன்று
வேனேதான் பீங்கானில் போட்டுக் கொண்டு
விதமாகக் கடுக்காயுந் தான்றிக் காயும்
பானேதான் மாசக்காய் சீனாக் காரம்
பண்பான கொறுக்காயின் புளியுங் கூட
கானேதான் ஒருசுடனே காசு கட்டி
ஊக்காக வகைவகைக்கு விராகன் மூன்றே (38)

மூன்றாக இவையெல்லாம் பொடித்துக் கொண்டு
முனை எலுமிச்சம் பழத்தின் சாறுவிட்டு
நன்றாக வர்த்தமட்டும் ரவியில் வைத்து
நலமாக அம்மியிலே யரைத்தி டப்பா
பான்றாகப் பழச்சாற்றில் மைபோ லாட்டி
[illegible]ன்பாகப் பொடியாக்கி வைத்துக் கொண்டு
கூன்றாகவது தினமும் விளக்கி வாநீ
கொடிதான பல்ரோக மோடிப் போமே (39)

போமேநீ யின்னமொரு விபரஞ் சொல்வேன்
பொல்லாத புழுவிருக்கும் பல்லுக் கப்பா
தாமேநீ கல்வியுட நூலை வாங்கி
தயவாக நூலதனைச் சொல்லக் கேளு
ஆமேநீ கிற்க்காயி நெல்லி வேரை
அடவாகக் காப்பிட்டு ஆதி வாரம்
வாமேநீ பச்சரிசி கருப்புக் கட்டிவைத்து
மசிநசி யென்று நூறு கூறே (40)

கூறேநீ நூற்றெட்டு தரமுஞ் சொல்லிக்
    கூறடா அவர்பேரைச் சொல்லி மைந்தா
பாரேநீ புழுச்செத்தந் நீர வென்று
    பண்பாக வேரதனை யருமற்நா ளுஞ்
சேரேநீ பிடுங்கி விடுமறு நாட்குள்ளே
    செத்ததடா புழுவங்கே சேரத் தானும்
வீரேநீ போகருட கடாட்சத் தாலே
    விதமாக இன்னமொன்று சொல்லக் கேளே (41)

வாய்ப்புண்ணுக்கு எண்ணெய்

கேளப்பா வாயெல்லாம் புண்ணே வந்தால்
    கெணிதமுட னெண்ணெ யொன்றுசொல்லக் கேளு
நாளப்பா விளக்கெண் ணெய்படிதா னொன்று
    நலமான சங்கஞ் சார்படிதா னொன்று
வீளப்பா பாச்சாலை வாட்டித் தண்ணீர்
    விதமாகப் படியொன்று அளந்து வாரு
சூளப்பா நீர்முள்ளிச் சாறு நாழி
    சுருக்கான கஸ்தூரி மஞ்சள் தானே (42)

தானான கரிய சீரகத்தி னோடு
    தயவாக வகைவகைக்கு விராகனின்று
கோனான பொடிபண்ணி யிதனிற் போட்டு
    கொடிதான அக்கினியி லெரித்து வாங்கி
பானான எண்ணெயைத் தான்பதத்தில் பார்த்து
    பண்பாகத்தான் வடித்து எடுத்துக் கொண்டு
நானான படியரைக்கால் வீதங் கொள்ள
    நான்மூன்று தான்கொள்ள ரணங்கள் போமே (43)

போமேநீ வாய்ப்புண்ணும் வெள்ளை போகும்
    பொற்களுடன் தடிப்புவகை சிரங்குந் தீருந்
தாமேநீ சூலைவெள்ள கட்டுந் தீருந்
    தயவாகப் பத்தியந் தானொழு நாளும்
வேமேநீ வெந்திருக்கு மன்ன மாகும்
    விதமாக மற்றொன்று மாகாத் தப்பா
வாமேநீ யேழாநாள் முழுகும் போது
    வகையாகக் கருக்கொண்டு சொல்லக் கேளே (44)

சொல்லுவேன் குதிரைசு யஸ்தியோ மத்தோடு
    சுருக்கான வூஞ்சலுடப் பட்டை கட்டி
வெல்லுவேன் கீருக்கியதை கிழாமும் வைத்து
    விதமாக வுள்ளுக்குக் கொள்ளச் சொல்லு
செல்லுவே னுப்பிட்ட பருப்பின் சாறு
    கெனிந்த முடனீர்விட்டு அமுது கொள்ளு
மல்லுவேன் மந்நாநாள் புளியைக் கட்டு
    மைந்தனே யெட்கருகு மாகா தென்னே (45)

ஆகாது வாழையிலை வாழைக் காயும்
    அப்பனே யீராறு நாள்தான் தள்ளு
வேகாதவாயு வெள்றுபதார் தீதந் தள்ளு
    விதமான பெண்ணுடைய மாமிகை யாகா
போகாதில்லா விட்டால் வியாதி யப்பா
    பொங்கமுடன் தானிருந்தால் பறக்கும் பாரு
நோகாது கிரந்தியெல்லா மகன்று போகும்
    நோய்தீரும் போகருட கடாட்சந் தானே (46)

மேகத்தடிப்பு புள்ளிக்கு

தானென்ற தடிப்புக்குச் சொல்லக் கேளு
      தயவான பாச்சா லைவாட்டித் தண்ணீர்
பானென்ற படிகால்தான் வடித்துக் கொண்டு
      பன்பாக நாளிருந்து கொடுத்த போது
கானென்ற தடிப்பெல்லா மோடிப் போகும்
      கனலான புள்ளியென்ற மேகந் தீரும்
கோனென்ற மூன்றுகெடுக்கு கொள்ளும் போது
      கொடிதாக முன்போல் பத்தியமாமிக் காரே (47)

சகல ரணங்களுக்கும் களிம்பு

தானப்பா களிம் பொன்று சொல்லக் கேளு
    தயவான லிங்கமுடன் மிருதார் சிங்கி
ஊனப்பா ரசகற் பூரத்தி னோடு
    உத்தமனே வெள்ளையென்ற குங்கிலியந் தான்
கோனப்பாக குக்காவு மாசிக் காயும்
    [illegible]
    குணமான சாசுக்கட்டி தான்றிக் காயும்
வானப்பா ஓரெடையாமி கல்வத் திட்டு
    வகையாகத் தானரைக்க விபரங் கேளே (53)

கேளேநீ பசுவினுட வெண்ணை போட்டு
    கெணிதமா யொருசா மமரைத்த பின்பு
சூளேநீ தண்ணியிலே மிதக்க வைத்து
    சுகமாக மற்றா நாளெடுத்துக் கொண்டு
கோளேநீ குலையப்பா ரணத்திற் பூச
    கொடிதான ரணங்களெல்லா மாறிப் போகும்
வேளேநீ களிம்பதுவுஞ் சுருக்கு மெத்த
    விதமாக இன்னமொன்று விளம்பக் கேளே (54)

விக்கலுக்கு

விளம்புவேன் விக்கலுக்குச் சொல்லக் கேளு
விதமாகச் சந்தனத்தின் கட்டை யோடு
தளம்புவேன் சாம்பிராணி சமனாய்ச் சேர்த்து
தயவாகப் பொடிபண்ணி காகிதத்தில்
குளம்புகிறேன் சுருட்டியதை புகை பிடிக்கக்
குணமாக விக்கலது தீரும் பாரு
விளம்புகிறே னின்னமொன்று சொல்லக் கேளு
விதமாகக் கவிக்கமொன்று சொல்லு வேனே (55)

கலிக்கம்

சொல்லுவேன் கிராம்போடு மிளகு சுக்கு
சுகமான துவரை வெள்றபருப்பு கட்டி
வெல்லுவேனி வையெல்லாம் விராக னொன்று
விதமாக அகத்தியனார் குழம்பைக் கேளு
சொல்லுவேன் விராகனை கால்தானி கட்டி
சுகமான மேனிசார் தன்னா லாட்டி
மல்லுவேன் வெற்றிலையின் சாற்றா லாட்டி
மைந்தனே கயிறுபோல் வைத்துக் கொள்ளே (56)

கொள்ளடா முருங்கையிலைச் சாற்றில் தேமித்துக்
குணமாகக் கண்ணிலே போட்ட போது
மெள்ளடா சன்னி முதற்பசாச போகும்
மேன்மையாம் விஷமாடு மயக்கம் போகும்
விள்ளடா போகருட கடாட்சத் தாலே
விளம்பினேன் புலிப்பாணி விளக்க மாக
கள்ளடா மனத்தோர்க்கு காட்டொ ணாது
கருவான வயித்தியந் தானிவைக் கேளே (57)

சோகை, காமாலைவீக்கம், நீர்க்கோவை, பாண்டு, மகோதரம், பிலிகை
இவைகளுக்கு கியாழம்

.....

ஆமேநீ நீர்முள்ளி கீழ்க்காய் நெல்லி
    அப்பனே விழல்வேர் கோவைத் தண்டு
வாமேநீ பூவரசம் பட்டை கையான்
    வளமான செந்தொட்டி வேட்டி னோடு
தாமேநீ சிறுபூளை வேரி னோடு
    தயவாகச் சிந்புடைய துளிரு மப்பா
நாமேநீ நெருஞ்சில் வேர்சிறு கீரையின்வேர்
    நலமாம் நிலவாகை ஆத்தல் பட்டைகேளே (66)

கேளேநீ ஊஞ்சலென்ற பட்டை கட்டி
கெணிந்த முடல்வள கவகைக்கு பலந்தாணாறு
சூளேநீ சரக்குவகை சொல்லக் கேளு
சுகமான கருக்காம் ரோகணியுங் கட்டி
வீளேநீ கருஞ் சீரகத்தி னோடு
விதமான காட்டுச்சீரக முங் கட்டு
பாளேநீ யில்லையப்பா திப்பிலியுங் கூடப்
பண்பான வகைவகைக்கு விராக னாதே (67)

ஆறேநீ யிவையெல்லா மிடித்துத் தோண்டி
அடவாக ஆழபங்காய் நிறுத்துக் கொண்டு
ஊரேநீ யொருபங்கு பாண்டத் திட்டு
உத்தமனே நாலுபடி சலத்தை வார்த்து
கூரேநீ யெட்டொன்றாய்க் குருகக் காய்ச்சி
குணமாகத்தான் பிழிந்து வடிதான் கட்டி
சேரேநீ கொடுத்துவர ஆறுநாள் தான்
செயலான பத்தியந் தானப்பா காதே (68)

ஆகாது சோகை காமாலை வீக்கம்
அடவான நீர்க்கோவை பாண்டு போகும்
போகாத மகோதர மும்பிலிகையும் போகும்
பொருமலுடன் மேலிளைப்பு தீர்ந்து போகும்
நோகாது ஏழாநாள் நீரை வாரு
சுணுக்கமாயுப் பிட்ட பருப்புக் கட்டி
வேகாது மத்றாநாள் புளியுஞ் சேரு
விதமாக இந்தநோய் தீரும் பாரே (69)

பித்த வெடிப்புக்கு

பாரேநீ பித்தவெடி வந்த தானால்
    பாங்கான மருதுடைய இலையை வாங்கி
சீரேநீ பசுவின்பால் தனில் தவைத்து
    சிறப்பாக மூன்றுநாள் குடிக்கச் சொல்லு
வீரேநீ பத்தியந்தான் பாலுஞ் சோறும்
    விதமாக ஏழாநாள் நீரை வாரு
பேரேநீ போகருட கடாட்சத் தாலே
    பேதமில்லை புலிப்பாணி பாடினேன் வேலே (70)

நீரிலிரத்தங்கண்டால்

பாடினேன் நீர்தனிலே ரத்தம் வீழ்ந்தால்
    பாங்காகப் புழுங்கரிசி பலந்தா னொன்று
கூடினேன் விராலியிலை பலந்தா னொன்று
    குணமாக வரிசியைத் தானாற வைத்து
சாடிவேனி டித்தெடுத்துக் கொத்திப் பாயப்பா
    சார்வாக மூன்று நாளாறு வேளை
நாடினேன் விந்தவிதன் கொடுத்த போது
    நடுநடுங்கி யோடிவிடுந் தின்னந் தானே (71)

இரணங்களுக்குப் பூகை

விளம்பினே னின்னமொரு கருவைக் கேளு
    விதமான ரணங்களென்ற வியாதிக் கெல்லாம்
தளம்பினேன் கொமுச்சி யூடவேரும் பட்டை
    தயவாக யூறவைத்து நையத் தட்டி
குளம்பிநன் சங்காலில் பட்டை யிட்டு
    குணமாக லிங்கமப்பா விராகன் பாதி
நளம்பிரேன் சங்காள் மேல்வைத்துப் பின்னும்
    நலமாக முன்பட்டை நிறைவ மூடே (74)

முடியபின் தலைவைத்து புகையை வாங்கி
முக்கியமாம் விருங்கியதை சுவாசந் தன்னில்
நாடிய முன்னாள்மூன்று வேளை யாகும்
நலமாக் குடித்தவுடன் பார்சோறு தின்னு
தேடியபின் னைந்தாநாட் பத்தியமாய்க் காரு
தெளிந்தபின்பு ஆறாநாள் தலையை மூழ்கு
பாடிய பின்னேழாநாளு நாரும்பைக் கட்டு
பண்பாக எட்டாநா ளபுஷியைச் சேரே (75)

சேரப்பா கரப்பனென்ற வகைக ளெல்லாஞ்
சிறப்பாக ஈராறுநாள் தான் தன்னு
பாரப்பா கன்னுவலி கன்னோசை யோடு
பாங்கான விற்புருதி கண்ட மாலை
வீரப்பா அரையாப்பு சூலை யோடு
விதமான பிளவை யொடுலிங்கப் புற்று
கூரப்பா ரணங்களென்ற நோமிக ளெல்லாங்
கூசாம லோடிவிடுங் கொள்கை பாரே (76)

பாரப்பா போகருட கடாட்சத் தாலே
    பண்பான புலிப்பாணி விளங்கத் தானும்
சீராகக் கொக்கோகத் திரட்டொன் றப்பா
    திறமுடனே சாத்திரைம்பதி தனுஞ் சொல்லோம்
கரப்பாவாடை பதினாறிற் சொன் னோம்
    குருவான ஞானமொடு தொண்ணூற் றாறு
வீரடா சோசிய முன்னூற்றுக் குள்ளே
    விளம்பினேன் நேத்திரம்போல் தோணும் பாரே (91)

குஷ்டத்துக்கு

தாவென்ற குஷ்ட நோய்வந்த பேர்க்கு
    தயவாக மருந்தொன்று சொல்லக் கேளு
ஐயென்ற செவ்வலரி வேரை யப்பா
    உலரவிட்டுக் குழித்தயில மாகச் வாங்கி
பாவென்ற குப்பிதனி லடைத்துக் கொண்டு
    பண்பாகச் சிறுகச்சித் தயிலத் திட்டு
ஏவென்ற ஒருதுளி தண்ணீரில் குத்தி
    இதமாகத் தாங்கலக்கி கொடுத்தி டாயே (105)

கொடுத்திடப்பா நாள்மூன்று காலை வேளைக்
    குதியப்பா வடியுமடா ரணங்கள் தோறும்
அடுத்திடப்பா பத்தியந் தானுப் பாகாது
    அடவாக ஏழாநாள் நீரை வாரு
விடுத்திடப்பா உப்பிட்ட பருப்புக் கட்டி
    விதமாக மற்றாநாள் புளியைச் சேரு
எடுத்திடப் பாகுஷ்டநோய் தீர்ந்து போகும்
    இதமாக போக்ருட கடாட்சந் தானே (106)

மருந்தீட்டுக்கு சிட்சை

தானாக் இவ்வமொன்று சொல்லக் கேளு
　　தயவாக மருந்திடு கொண்ட பேர்க்கு
கோளக எண்ணெயிட்டு முழுகச் சொல்லி
　　குணமாக ரசம்விட்டு அன்ன மீந்து
வேளகத் தேங்காயின் பாலை வாங்கி
　　விதமாகக் கரும்பாலைச் சர்க்கரையுஞ் சேர்த்து
வாளகத் தேங்காயின் பாலை யூட்டு
　　வகையாகக் கம்பளமேல் படுக்கச் சொல்லே (107)

சொல்லப்பா முருங்கையென்ற இலையை வாங்கி
சோரவே வதக்கியதைச் சார் பிழிந்து
அல்லப்பா சாறுபடி காலே யாகும்
அடவாக ஆவின்பால் நேரே சேர்த்து
இல்லப்பா காலமே கொடுத்த போது
அடவாகப் பேதியிலே மருந்து வீழும்
நல்லப்பா விழுந்தவுடன் ஸ்நானம் பண்ணு
நலமாக வேண்டுதல்லாங் கட்டிக் கொள்ளே (108)

தாவப்பா கன்னியர்கள் விதவை கூடித்
தாண்தழுவ வேணுமென்றால் சொல்லக் கேளு
மாவப்பா தலைமுழுகும் பக்கந் தன்னில்
மைந்தனே புணர்ந்திடவே கெர்ப்ப மில்லை
வீணப்பா விறவறிய மாட்டாமல் தான்
விதமாக குலைகள் வந்தநேரும் பாரு
ஊனப்பா இதுவல்லோ பாவம் பாவம்
உத்தமனே அறிவாலே அறிந்து தானே (114)

மூலரோகத்துக்கு சூரணம்

போமேநீ மூலமென்ற ரோகந் தீரப்
    பூட்டுகிறேன் மருந்தொன்று சொல்லக் கேளு
ஆமேநீ தூதுவேளை மூலத் தோடு
    அடவான மருட்கிழங்கு கருணை மூலம்
தாமேநீ பிரண்டைவேர் நல்ல ஆரை
    தயவான காட்டுடைய கருணை மூலம்
வாமேநீ மிளகருணை மூலந் தானும்
    வளமான அறுகிடை கிழங்கு தானே (136)

தானென்ற நீர்பூண்டு கிழங்கு மூலி
    தயவா கவூரலிலிட்டுத் தூளாச் செய்து
கோனென்ற பொடியெல்லாஞ்சமனாய்ச் சேர்த்து
    கொடுப்பாயே விரற்கடைதான் தேனிற் கொள்ள
நானென்ற நாற்பதுநாள் கொள்ளும் போது
    நடுநடுங்கி மூலமெல்லாம் ஓடும் பாரு
வானென்ற போகருட கடாட்சத் தாலே
    வளமான புலிப்பாணி விளம்பி னேனே (137)

தானான முன்யுகத்தில் பிரம மாவுக்குத்
    தாயான பார்வதியாம் தந்த சாபம்
கோனான தண்டாயு தத்தைப்பூசை செய்து
    கொடிதான சாபமது நிவர்த்தி யாச்சு
தேனானதி ரேதாயின் யுகத்தி லப்பா
    தேவேந்திரனுக்குத் துரு வாசர் சாபம்
மானான தேவர்கோன் பூசை செய்து
    மைந்தனே முனிசாபந் தீர்ந்து போச்சே (142)

போனபின்பு சொக்கலிங்கந் தன்னிற் சென்று
    பொன்னுலகில் தேவேந்திரன் பட்ட மாச்சு
ஆனபின்பு துவாபுரியில் போக நாதர்
    அடவான கற்சிலை யிலம்ம வொன்று
கோனபின்பு கொங்கணரும் கருவூ ராரும்
    கூட்டிவந்து முன்விட்டா ளாயன் முன்னே
சேனபின்பு கற்சிலையைச் சேர்ந்த போது
    சிந்தைதனிற் சிலையென்று அறிந்திட் டாரே (143)

அறிந்தபின்பு அச்சிலையைப் பார்த்து அம்மா
அப்சாரமடி யேற்கு நிவர்த்தி யென்ன
வறிந்தபின்பு சிவகிரியில் தண்ட பாணி
மன்னவரைப் பூசிக்க நிவர்த்தி யாகும்
புரிந்தபின்பு தேவியென்ற சிலைதான் சொல்ல
போகருமே துவாபுரியில் பூசை செய்தார்
செரிந்தபின்பு [illegible] அபசாரம் நிவர்த்தி யாச்சு
சார்வான கலியுகத்தில் சொல்லக் கேளே (144)

கேளேநீ கலியுகத்திலிரு நூற்றை ந்தில்
கேசரிபோல் புலிப்பாணி பேரும் பெற்றேன்
சூளே நீசலந்திரட்டிக் கரத்தில் லேந்தி
சுகமாக வேங்கையின் மேலேறிச் சென்று
நாளேநீ சிவகிரியில் தண்டமுரு பாணி
நாதருக்குப் பூசித்த அருளைப் பெற்று
ஆளேநீ போகருட குகை மேலையா
அஷ்ட சத்திபதி தனிலேவாழ்ந்தேன் பாரே (145)

பாரேநீ யுகந்தோறும் சொல்லக் கேளு
பண்பான மேருவுக்கு வட பாகத்தில்
நீரேநீ மனிதரப்பா தங்க வண்ணம்
திகழ்மதியா முயரமப்பா சொல்லக் கேளு
வாரேநீ நாலாயிர முழமே யாகும்
வளமான ஆலங் கனியும் நீரோடே
சீரேநீ அருந்துறத அது தானப்பா
சிறப்பான சதாசிவமே தெய்வந் தானே (146)

தானாரும் வயதுதான் நாலு லட்சம்
    தாயா சசத்தியத்தைக் கைவி டாதார்
கோனான பொய்யென்றுஞ் சொல்லி டாதார்
    குவலையங்கள் கைலையல்லால் வேறொன் றில்லை
சேனான மேருவுக்கு வட பாகத்தில்
    செயலான மனிதருட செய்கை யப்பா
தேனான போகருட கடாட்சத் தாலே
    தெளிவாகப் புலிப்பாணி விளம்பி னேனே (147)

விளம்புகிறேன் மேருவுக்கு கிழக்கே யப்பா
    விதமான மனிதர்கள்தாம் நீல வண்ணம்
நளம்புகிறே னுயரமது நாலு நாகும்
    தயவாக நவக்கனியுமந் நீரோ டே
கிளம்புகிறேன் அருந்துவது இது தானப்பா
    கிருபையுள்ள விஷ்ணுவுமே தெய்வ மாகும்
நளம்புகிறேன் வயது தானிரண்டு லட்சம்
    நலமில்லா அசத்தியங்களிங் கில்லைத் தானே (148)

இல்லான மேருவுக்கு மேற்கே யப்பா
    இருப்பார்கள் மனிதரப்பா ரத்த வண்ணம்
வல்லான வுயரமது நாற்ப தாகும்
    வகையான மாங்கனியு மந்தி ரோடே
எல்லாரு மருந்தமது இதுதான் பாரு
    இதமான பராசத்தி தெய்வ மாகும்
சல்லான வயசுதான் லட்ச மாகும்
    சார்வான சத்தியமும் பொய்யில் லாரே (149)

பொய்யில்லை மேருவுக்குத் தெற்கே ஐயா
        பொங்கமுடன் மனித ருடநிறத்தைக் கேளு
மெய்யில்லா நிறமதுதான் அந்தி வண்ணம்
        மைந்தனே யுயரமது முழந்தா நாலு
செய்யில்லா அறுசுவையு மநேக வர்க்கஞ்
        செயலான அன்னமொடு சருகை நீரும்
எய்யான பாலோடு கிழங்கு காய்கள்
        இதமான அமுர்தமது கொள்வா ருண்டே (150)

உண்டான அநேகவித தெய்வ முண்டு
        உத்தமனே சாஸ்திரங் களநேக முண்டு
பண்டான பொய்கொலையுங் களவு முண்டு
        பண்பில்லா விசுவாசம் பாவ முண்டு
செண்டான முறைமைகெட்டு மையல் கொண்டு
        செயலான பாக்கியமும் வறுமை யுண்டு
கொண்டான வயது தானு றெல் பார்கள்
        கொற்றவனே நிஷயந் தானில்லைத் தானே (151)

தானென்ற கோயில்குளம் ஆறு முண்டு
    தயவான புண்ணியமும் பாவ முண்டு
மானென்ற சித்தரென்றும் முனிவ ரென்றும்
    மகிமையாந்த போதனர்கள் பெரியோ ரென்றும்
கோனென்ற வரசென்றும் குருக்க ளென்றும்
    கொடிதான பிரமலபி கடந்தோ னென்றும்
வானென்ற கிரகங்கள் நோமிக ளென்றும்
    வகைவகையாய் பலசாதிய நேகந் தானே (152)

மருந்தீடுமுறிய

ஆமேநீ மருந்தீடு முறிய வேண்டில்
அப்பனே இலவிணட பட்டை கொண்டு
தாமேநீ எலுமிச்சங் காயின் சோடு
தயவாக அரைத்துக் காடியிற் கலக்கி
வாமேநீ அட்டைடைதான் சர்க்கரையுங் கூட்டி
வளமாகக் கொடுத்தவுடன் மயக்கந் தீரும்
போமேநீ பெண்மயக்கம் ஆண் மயக்கம்
போச்சேநீ மூன்றுநாள் கொடுத்த போதே (154)

போதேநீ சங்கம் வேரிழைத் தரைத்து
பொற்கமுடன் பூன்னைக்காய் வீத மாக
சூதேநீயில் லையடா காடியிற் கொள்
சுருக்கான மண்டலத்தில் வியாதி யெல்லாம்
ஊதேநீ யோடிவிடும் நாடு விட்டு
உத்தமனே பத்தியந் தானில் லையப்பா
சாதேநீ வெள்ளாட்ட முரிதன்னில் கொள்ள
சார்வாக சூலையது தீருந் தானே (155)

கர்ப்பமுண்டாக எண்ணெய்

தானேதா னின்னமொன்று சொல்லக் கேளு
　　தயவான வீழியிலைச் சாறு நாழி
மானேதான் தைவேளைச் சாறு நாழி
　　மைந்தனே பிரமியிலைச் சாறு நாழி
கோனேதான் கொட்டையிலைச் சாறு நாழி
　　கொடிதான நிலவாகைச் சாறு நாழி
தேனே தானாவின் பால்படி தானாழி
　　தெளிவாகச் சரக்குவகை சொல்லக் கேளே (156)

கேளேநீ மஞ்சளுடன் கடுகு கூடக்
    கௌிஞ்த முடலிந்துப்பு வெண்கா ரந்தான்
நாளேநீ கடுக்காயும் வெள்ளைப் பூண்டு
    நலமான அவ்வசம்பு சுக்குங் கூட
பாளேநீ வகைவகைக்கு விராகன் மூன்று
    பன்பாகப் பொடிசெய்து இதனிற் போட்டு
கோளேநீ விளக்கெண்ணெய் நாழி விட்டு
    கொடிதான மெழுகுபதந் தன்னில் வாங்கே (157)

வாங்கியே கணபதிக்கு முன்னே வைத்து
    வகையாக சோடசங்கள் செய்த பின்பு
பாங்குடனே மாதவிடை மூன்றாம் நாள்தான்
    பன்பாகத் தலைமுழுகிக் கரண்டி யெண்ணெய்
தாங்கியே கொடுத்துவிடு நாள் மூன்றப்பா
    தயவாக மறுபத்திய மொருநாட் காகு
தூங்கியே திரியாதே ஐந்தா நாளில்
    துசாக சிரசுக்கு நீரை வாரே (158)

வாரேநீ வறுத்தவுப்பு பொறிச்சா ரப்பா
வளமாக மற்றாநா ளெல்லாஞ் சேரு
தீரேநீ மற்றாநாள் நசிய மொன்று
தீர்க்கமாம் வேலியிலை வேரைத் தட்டி
கூரேநீ வலது நாசியிற் பிழிந்தால்
கொற்றவனே ஆண்பிள்ளை பிறக்கும் பாரு
சீரேநீ யிடதுநாசியிற் பிழிந்தால்
சிறப்பான பெண்ணென்றுஞ் செப்பி னோமே (159)

செப்பினேந் துவளையொன்று சொல்லக் கேளு
சிறப்பான மாவிலை மாதளையுஞ் சேர்த்து
தப்பினேந் கஸ்தூரி மஞ்ச ளோடு
தாயகமாயிவை மூன்றுஞ்ச மனாய்ச் சேர்த்து
அப்பினேநு சலம்விட்டு அரைத்து மைபோல்
அடவாக மேனியெங்கும் பூசச் சொல்லு
வெப்பினோமே னோக்கி யுதிர்த்துப் போடு
விதமாக வுதிர்ந்ததைதான் சேர வாரே (160)

வாரியதை மாவிலை தன்னில் வைத்து
வகையாக முகங்காட்டி தலையைச் சுற்றி
கோரியே வடுவாசல் குழியைத் தோண்டி
குணமாகத் தான்புதைத்து சொல்லக் கேளு
ஆரினேன் சலமதுதான் சிரசில் வார்த்து
அப்பனே புகையொன்று சொல்வேன் பாரு
தூ ரிவேன் சாம்பிராணி அகிலின் கட்டைத்
தூ ளிடித்துப் புகைகாட்டு நாள்தான் மூன்றே (161)

மூன்றாநாள் துவளையிட்டுப் புகையும் போட்டு
மூர்க்கமுள்ள சிதம்பரத்தை மாரிக் கட்டு
ஈன்றுபோல் மூன்று திங்களிந்த பாவம்
இதமான மாதவிடாய் யாகும் பக்ஷவிம்
கன்றுபோலிம் முறையைச் செய்யும் போது
குணமாக கர்ப்பமது தாிக்கும் பாரு
ஊன்றுபோல் போகருட கடாட்சத் தாலே
உத்தமனே புலிப்பாணி பாடி. னேனே (162)

சிவகிரி வளப்பம்

பாடினேன் சிவகிரியின் மாற்றே தெள்ளில்
    பஸ்பாக ஆயிரத்தெ்ட்டு மாற்ற
சூடினே வைலோக மிதிலே யுண்டு
    சுருக்கப்பா சாஸ்திரமும் வேதை யோடும்
வாடியே திரியாதே நரையு மாறும்
    வயதப்பா லெக்கில்லை கெவுனி யாவாம்
நாடியே சுன்னமொடு சிந்தூரக் காடு
    நாயகனே அஷ்டசித்தி நடனந் தானே (163)

தாமென்ற நவசித்தர் கோடா கோடி
    தாநடன மதிகமடா சித்தர் கூட்டம்
கோவென்ற மலையுள்ளே விருக்ஷ மூலி
    குற்றமில்லை வேதையுந் தானை்நகஞ் செய்வார்
வாவென்ற தேவரொடு முனிவர் சித்தர்
    வருகிறதும் போகிறதுங் காணச் செய்யு
மாவென்ற தேவரொடு தவமே செய்தோர்
    மைந்தனே சித்திமுத்தி பெறுவர் தானே (164)

தானென்ற வராககிரிச் சுருவில் மைந்தா
    தயவான வோடைகளும் ஆறு தோறுந்
தேனென்ற அருவியூட மண்ணுங் கல்லுங்
    தெரியாமல் தங்கமா யிருக்கு மப்பா
பானென்ற மூலிகையால் வேதைமுறை யாகும்
    பட்டமண்ணுங்கல் முதலாய் தங்க மாகும்
கோனென்ற சிலைபோலே கிடக்கும் பாரு
    கொற்றவரே யறியார் களாருந் தானே (165)

சதுரகிரி

தானான சதுரகிரி மேலே யப்பா
　　தயவான உதகமொன்று இருக்கு தப்பா
மானான காஞ்சமைா ஙகாய சித்தி
　　மைந்தனே அஷ்டசித்தி கெவுன சித்தி
கோனான தேவர்முதல் கணங்கள் யாவும்
　　கூப்பிட்டால் கேள்விவந்து கேட்கும் பாரு
வானான சித்தருட கூட்ட மெத்த
　　வளமான சஞ்சீவி மூலி யுண்டே (166)

உண்டான மூலியைத்தான் குகையி னுள்ளே
　　ஒளித்துவைத்தார் சித்தரெல்லாம் வெளியா மென்று
பண்டான சித்தருக்கு மூலி கிட்டும்
　　பாவிகட்கும் காமிகட்கும் கிட்டுமோ சொல்
சென்டான பூவுலகில் மனுட ரெல்லாஞ்
　　செத்தவர்களை முந்திருப்பார் திடன் கொள்ளாது
கொண்டான விதியாளி வந்தா னாகில்
　　கூப்பிட்டுதான் கொடுப்பார் சித்தர் தானே (167)

சூலை வாயு மேகத்துக்கு தைலம்

என்னவேதயில் மொழிந்து சொல்லக் கேளு
இதமான கொடிவேலி மூலி தானும்
பன்னவே துலாமரை தாளிடித்துப் போட்டு
பன்பான ஆலிப்பட்டை சங்கம் வேரும்
நன்னவே வகைக்குவகை துலாமே கால்தான்
நாயகனே இத்துடனே கூடச் சேர்த்து
அன்னவே தண்ணீர் விட்டுக் காச்சு
அப்பனே வெட்டொன்றாய் குறுக்கி வாங்கே

வாங்கியே எள்ளெண்ணெய் நாழி வாரு
      வகையான மிளகு பலமரைத்துப் போடு
தாங்கியே பசுவின் வெண்ணெய் பலந்தானொன்று
      தயவான வேப்பெண்ணெய் படிகால் வாரு
பாங்கியே மெழுகு பதந்தனில் வடித்து
      பண்பாக முழுகி வரகுலை யேகுந்
தூங்கியே திரியாதே மேகமும் மெல்லாந்
      தொடுத்த விழுந்தேயோடு மெத்தீர் நில்லாதே (171)

<u>பிரமேகத்துக்கு எண்ணெய்</u>

நில்லாத பிரமேகந் தீர வேண்டில்
      நிஜயமாய்த் தேங்காய்ப் பால்படிதா னொன்று
வல்லான பொடுதலைச் சார்படிதா னொன்று
      நத்தைசு
      வளமான பிரமிச்சார் படிதா னொன்று
நல்லாக எரித்திறுத்து எண்ணெய் வாங்கி
      நாயகனே மூன்று நாளாறு வேளை
சொல்லாகக் குடித்தவுடன் பிரமி யங்கவி (172)
      சிறப்பாகத் தீருமடா திண்ணந் தானே

திண்ணமாம் பத்தியந் தானாறு நாளும்
சிறப்பான ஆவின் பாலாகு மல்லால்
வண்ணமாய் மற்றொன்று மாகா தப்பா
வளமாக ஏழாநாள் தலையை மூழ்கு
உண்ணமாஞ் சிம்ப்பிர மியம்ரத்தப் பிரமியம்
உத்தமனே தீருமடா இந்த எண்ணெய்
எண்ணமொன்று மில்லையடா ஜிஜ விசனம் போகும்
என்னசொல்வே னெண்ணெயுட வீரந் தானே (173)

சுகபேதி சூரணம்

வீரந்தான் பேதியொன்று சொல்லக் கேளு
விதமான சிவதைவேர் பசுவின் பாலில்
சீரந்தான் மித்க்கவிட்டு சுண்டக் காச்சி
திறமாக உலர்த்தியரைத் தூளாய்ப் பண்ணி
வாரந்தான் சரியெண்ட சர்க்கரையுஞ் சேர்த்து
வளமாக ஏலமது அரைக்கால் சேர்த்து
பாரந்தான் வெருகடனாளி வெந்நீரிற் கொள்
பள்ளநற் சீதமுதற் கழிந்து போமே (174)

சாதிலிங்கக் கட்டு

பாரேநீ லிங்கமது விராகன் பத்து
பாங்கான முலைப்பாலி லொருநாள் போட்டு
சீரேநீ விராகனெடை தங்க ரேக்கு
சிறப்பான லிங்கத்தின் மேலே சுற்றி
தேரேநீ வெண்காரம் பொரித்துப் பூசி
திறமாக சேங்கொட்டை படிநறுக்கிப் போட்டு
வீரேநீ யிடித்தப்பா தேங்காய் மட்டம்
விதமாக லிங்கத்தை பொதிந்து மூடே (179)

மூடியே சிரசட்டி' நடுவில் வைத்து
    மூர்க்கமுள் பசுவெண்ணெய் தேங்காய் வீதம்
நாடியே சேங்கொட்டை யூருண்டை மேலே
    நலமாக வைத்தெரிக்கக் கனல்தான் மீறி
ஆடியே தீயெரிந்து சாம்ப லாகும்
    அப்பனே ஆறவிட்டு எடுத்துப் பாரு
கூடியே லிங்கமது உருகிக் கட்டி
    கொற்றவனே உருக்கது போலிருக்கும் பாரே (180)

காதடைப்புக்கு தயிலம்

வாரே நீயின்னமொன்று சொல்லக் கேளு
    வளமாக அலாமுளகாம் நிறுத்துப் போடு
சேரேநீ ஞானிநீ ரெட்டொன் றாக்கி
    செப்பமுடன் மஞ்சட்டி தனிலி ருத்து
காரேநீ எள்ளெண்ணெய் நாழி விட்டு
    கனிவாக மிளகு பலமரைத்துப் போடு
தீரேநீ மெழுகுபதந் தனில் வடித்து
    தீர்க்கமாய் முழுகி வரப்பலனைக் கேளே (189)

கேளேநீ நீர்ச்சொரிப்பு பீநிசு வாதம்
    கெனிதமாய் சோகையொடு மண்டைக் குத்து
வீளேநீ மெல்வலிகள் சூலை னோயும்
    விதமான புடைசூலை மேக வாயும்
பாளேநீ சொரிசிரங்குந் தீரும் பாரு
    பண்பான காதடைப்புக் காதுக் குத்து
சூளேநீ யிவையெல்லாந் தீருந் தீரும்
    சுகமான போகருட கடாட்சந் தானே (190)

வயிற்றுக் கடுப்புக்கு

தானென்ற சுக்குமொரு விராகன் ரண்டு
        தயவாக மோருவிட்டு மைபோ லாட்டி
கோனென்ற அரசிலையில் வைத்து தைத்து
        குணமாக மோருவிட்டு வேகவைத்து
மானென்ற ஏழுதர மிந்தப் பாகம்
        மைந்தனே தயிருவடிக் கட்டி நேரே
வானென்ற தயிரில்வைத்து விழுங்கும் போது
        வயிற்றிரைச்சல் கடுப்பு முதல்தீர்ந்து போமே (191)

கர்ப்பூரக்குளிகை

போமேநீ சாதிக்காம் சாதி பத்திரி
        பொங்கமுடன் தக்கோலம் ஏலம் கோஷ்டம்
வாமேநீ சந்தனம் வால்மிளகும் கட
        வகைவகைக்கு விராகனெடை நிறுத்துப் போடு
தாமேநீ கிராம்பதுவும் விராகன் மூன்று
        தயவான கஸ்தூரி பச்சைப் பூரம்
ஆமேநீ குங்குமப்பூ வகைவகைக்கு
        அடவாக விராகனெடை யரையூ மாமே (194)

ஆமப்பா இளநீரா லரைத்து மைபோல்
        அடவாக குன்றிமணி போல ருட்டி
தாமப்பா நிழலுலர்த்தி தாம் பூலத்தில்
        தயவாகத் தின்றுவரப் பலனைக் கேளு
வாமப்பா முகவசியந் தேக காந்தி
        வளமான பல்லிலுள்ள வியாதி தீரும்
வேமப்பா அக்கினி யாமந்தந் தீரும்
        விதமான சன்னிமுதல் மேகம் போமே (195)

சூலை குஷ்டம் வலிப்பு குன்மம் பாண்டு விஷகடி ரோகத்துக்கு

போமப்பா கொடிவேலி நிலப்பனையின் மூலம்
        பொங்கமுடன் தண்ணீர் விட்டால் கிழங்கு கூட
நாமேநீ சீனி சர்க்கரையும் கூட
        நாயகனே வகைக்கு வகைபலந்தான் கேளு
தாமேநீ பலந்தானே முப்ப தாகும்
        தயவான செங்கொட்டை நாற்ப தாகும்
வாமேநீ ஞா ளிடத்துச் சூரணமே செய்து
        வளமாக சர்க்கரையும் நேரே கூட்டே (196)

கட்டே நீயிதிற்பாதி தேனுஞ் சேர்த்து
குணமாக இதினேரே அவி னெய்யை
நாட்டப்பா நாற்பதுநாள் அந்தி சந்தி
நாயக னேபத்தியந்தான் பாலுஞ் சோறும்
வாட்டப்பா சர்க்கரையுஞ் சீனியா குந்
வளமான விராகனெடைஜுத் தையந்தே கொள்ளு
ஆட்டப்பா இதனுடைய பலனைக் கேளு
அப்பனே பதினெட்டுச் சூலை போமே (197)

போமடா குஷ்டம் பதினெட்டுந் தீரும்
பொலிவான வலிப்பைந்து முதிர மெட்டுந்
தாமடா அஷ்டகுன்மம் பாண்டு ஆறும்
தயவான விஷக்கடியு மேகந் தீரும்
ஆமடா பலமுண்டு நரையு மாறும்
அடவான தேகமது அழகோ காந்தி
நாமடா போகருட கடாட்சத் தாலே
நலமாகப் புலிப்பாணி பாடி னேனே (198)

பல்லுக்குப்பொடி

பாடியே அரக்குடனே சீகைக் காரம்
　　பன்பாலை அருசுடனே கடுக்கா யப்பா
நாடியே மாசக்காய் வகை வகைக்கு
　　நலமாக விராகனெடை நிறுத்துக் கொண்டு
ஆடியே கடுக்காயுந் தான்றிக் காயும்
　　அரப்பொடியும் வகைக்குவகை விராகனி மூன்று
கூடியே யெலுமிச்சம் பழச்சார் விட்டு
　　குணமாக வுலரவைத்து பொடியாய்ச் செய்யே (199)

பொடியெடுத்து விளக்கிவரப் பலனைக் கேளு
புழுச்சாகு மெயிற்கரையுந் தீரும் பாரு
இடியெடுத்த பல்லசைவு பல்லுக் குத்து
எரிவான வாய்ப்புண்ணு நாற்றந் தீரும்
வடிவான பல்லொளிவு வசிய முண்டு
வளமான பல்லிலுள்ள வியாதி தீரும்
அடியான போகருட கடாட்சத் தாலே
துலக்கமாய்ப் புலிப்பாணி பாடி னேனே (200)

லோகபஞ்சீகரண செந்தூரம்

பாடியே தங்கமது ஒன்றரையு மாகும்
பண்பான காரீய மொன்றே காலாம்
ஆடியே செம்பதுவு மொன்றே யாகும்
அப்பனே யிருப்பதுவு முக்காலா கும்
கூடியே நாகமது அரையு மாகும்
குணமான ரசமதுதான் விராக னைந்து
நாடியே கந்தகந்தான் விராக னைந்து
நாயகனே அரிதாரம் விராக னொன்றே (205)

ஒன்றான இவையெல்லாம் பொற்றலையின் சாற்றால்
 ஒளிவாக இருசாம மைபோ லாட்டி
மன்றாகப் பொடிசெய்து குப்பிக் கேற்றி
 பண்பான மாக்கல்லு கொண்டு மூடி
வன்றாகக் குப்பிக்கு சீலை செய்து
 வளமாகத்தான் செய்து வாயை விட்டு
நன்றாக சட்டியிலே மணல் தானப்பா
 நலமாக விரல் நாலுயரம் போடே (206)

போடேநீ குப்பிவாய் தெரிய மூடி
பொங்குமுடன் தானெரிப்பாய் கமலம் போலே
ஆடேநீ நாற்சாம மெரித்த போது
அப்பனே சிந்தூ ர மாகும் பாரு
கூடேநீ ஆவின்பால் வெண்ணெய் தன்னில்
குணமாகப் பனவெடையில் பாதி கொள்ள
நாடேநீ நாற்பதுநாளி கொண்ட போது
நாயகனே வியாதியெல்லாந் தீருந் தானே (207)

தானென்ற தேகமது வலுத்துப் போச்சு
தயவான வசிகரமுங் காந்தி யுண்டாம்
கோனென்ற ரசிதமது யெழு கட்டிக்
குணமான செம்பதிலே மூன்றுஞ் சேர்த்து
வானென்ற தங்கமது ஒன்று கட்டி
வளமாகத் தானுருக்கி குரு வொன்றில்
தேனென்ற களிப்போ லேயிருக்கும் பாரு
செம்மையாய் ஓட்டில் வைத்தூ திப் போடே (208)

கோடேநீ மாத்திரைந்த யிருக்கும் பாரு
    பொங்கமுட னெடைக்கெடைதான் தங்கஞ் சேர்த்து
ஆடேநீ சிவனத்தைச் செய்து கொண்டு
    அடவான சாஸ்திரத்தை யறிந்து பாரு
கடேநீ பஞ்சீகரணஞ் செந்தூரந் தான்
    குணமா குந்தேகமது இறுகும் பாரு
தேடேநீ போகருட கடாட்சத் தாலே
    தெளிவான புலிப்பாணி பாடி னேனே (209)

பஞ்சமுகச் செந்தூரம்

பாடினேன் சாதிலிங்கம் ரசமுங் கெந்தி
பன்பான வீரமுடன் தாரங் கட்டி
ஆடினே னிவையெல்லாஞ் சமனாய்க் கொண்டு
அடவாகக் காட்டா மணக்கல் பாலாலாட்டிநூ
நாடியே வில்லைதட்டி யுலர வைத்து
நலமான புடமதுதான் கோழி யாகும்
கூடியே யாறவிட்டு எடுத்துப் பாரு
கொற்றவனே செந்தூர மாகுந் தானே (215)

தாவென்ற செந்தூரம் பணவெடை தான்கொள்ள
தயவான திரிகடுகு பொடியி லப்பா
பாவென்ற தேனாகும் வெண்ணெ யாகும்
பன்பான பனையுடைய கருப்புக் கட்டி
வேவென்ற விருகளிலே கொள்ளும் போது
வெடிகுலை குஷ்டமுதல் கறுப்பு வெள்ளை
கோவென்ற மேகத்தா லெடுத்த ரோகம்
கொற்றவனே குன்மமுதல் வாயு போமே (216)

நீரெரிவுக்கு

தானென்ற நீரெரிவு கண்டு தானால்
     தயவாகக் கட்டுக்கொடி யிலை யரைத்து
வானென்ற நிம்பக் காயளவு தானும்
     வகையாகக் கால்படியா ஞ்சலத்திற் சேர்த்து
கோனென்ற சீரகமும் ஏலந் தானும்
     கொடிதாக விராகனெடை பொடித்துப் போட்டு
ஆனென்ற சீனி சர்க்கரை தானிட்டு
     அளவாகக் கலந்துகொண்டு உண்டு பாரே (219)

புரையாதி ரணங்களுக்கு தயிலம்

பாரேதான் நொச்சிவேர் அழிஞ்சி வேரும்
　　பண்பான விழுதிவேர் சமனாம்ப் போட்டு
சீரேதான் குழித்தயில மாக வாங்கி
　　சிறப்பாகப் புரைகளுக்கு விட்ட போது
கூரேதான் விற்புருதி கண்ட மாலை
　　குறிப்பான அரையாப்பு கன்னப் புற்று
நேரேதான் தொடைவாழை குழிவாழை யோடு
　　நேரான பிளவையொடு தீரும் பாரே (220)

நோயின்நட்சத்திரங்களறிய

தாவென்ற அசுபதிநாள் முதற் காலப்பா
　　தயவாக ஒன்பதுநாள் சுரமே தீரும்
தேவென்ற அசுவதி ரண்டாங்கால் கொல்லு மப்பா
　　திறமாகப் பத்தாநாள் மரண மாவான்
கோவென்ற மூன்றாங்கால் பதினைந் தாகும்
　　குணமாக நாலாங்கால் மரணஞ் செய்யும்
வாவென்ற பரணிதனில் முதற்கால் மூன்று
　　வளமான ரண்டாங்கால் வேழாமென்னே (232)

என்னவே மூன்றாங்கால் பதினைந் தாகும்
　　எளிதில்லா நாலாங்கால் பதினைந் தாகும்
நன்னவே கார்த்திகைக்கு முதற் காலானால்
　　நலமான வொன்பதா நாள்தீரும் பாரு
பன்னவே ரண்டாங்கால் பத்தே யாகும்
　　பண்பான மூன்றாங்கால் பதினைந் தாகும்
அன்னவே நாலாங்கால் நாற்பத் தெட்டு
　　அடவாக ரோகணியில் முதற்கால் பத்தே (233)

பத்தான ரண்டாங்கால் பதினெட் டாகும்
பன்பான மூன்றாங்கால் எண்ணாள் கப்பா
பெத்தான நாலாங்கால் ஏன்பத்தி ரண்டு
பேதமில்லை தீர்ந்துவிடு மின்னஞ் சேகு
முத்தான மாலிதலையின் முதற் காலப்பா
முப்பது நாளாவதிப்பு தீரும் பாரு
சித்தான ரணடாம் காலிருபத் தெட்டு
திறமான மூன்றாங்கால் பதினைந் தாமே (234)

ஆமேதான் நாலாங்கால் முப்பத் தைந்து
அடவான ஆதிரைநாள் முதற்கா லொன்பான்
தாமேதான் ரண்டாங்கால் மரண மாகும்
தயவாக மூன்றாங்கால் நாள்தான் பத்து
வாமேதா நாலாங்காலி ருபத் தைந்து
வளமான புனர்பூசம் நாள்த் தாளேழு
போமே தாவிரண்டாங்கால் நாள்தான் பத்து
பொங்கமுடன் மூன்றாங்கால் பதினெட் டாமே (235)

ஆமப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
அடவான பூசமப்பா முதற் காலேழு
சோமப்பா ரண்டாங்கால் பனிரண் டாகும்
சுகமான மூன்றாங்கா லொன்ப தாகும்
காமப்பா நாலாங் காலிருபத் தேழு
கனிவான வாயிலிய முதற்கா லொன்பான்
தாமப்பா ரண்டாங் காலிருப தாகும்
தயவான மூன்றாங்கால் தொண்ணூற தானே (236)

தானான நாலாங்கால் முப்பத் தொன்பான்
    தயவான மகமுதற்கால் மரணஞ் செமியும்
வானான ரண்டாங் கால்முப்ப தாகும்
    வளமான மூன்றாங்கால் எண்பத் தைந்து
கூனான நாலாங்கால் நாள் தானைந்து
    குணம்பூர முதற்கால் தான்சாவு மாகும்
தேனான ரண்டாங் காலிருபத் தைந்தில்
    சிறப்பான மூன்றாங் காலிருப்த் தாறே (237)

ஆறான நாலாங் காலெண்பத் தொன்றாம்
    அடவான வுத்திரந்தான் முதற் காலெட்டு
வீறான ரண்டாங்கால் முப்ப தாகும்
    விதமான மூன்றாங் காலன்பத்தி ரண்டாம்
தீறான நாலாங்கால் மரண மாகும்
    திறமான அஸ்த முதற்கால் தானெட்டு
கூறான ரண்டாங்கால் பதினைந் தாகும்
    குணமான மூன்றாங் காலிருவத் தெட்டே (238)

எட்டான நாலாங்கா லெண்பத் திரண்டு
எளிதான சித்திரையு முதற்கா லொன்பான்
நெட்டான ரண்டாங்கால் பதினைந் தாகும்
நேரான மூன்றாங் கால்பன்னி ரண்டு
கிட்டான நாலாங்கால் நாற்பத் தொன்று
தெய்யான சோதிமுதற் காலீ ராறு
குட்டான ரண்டாங்கால் மரணஞ் செய்யும்
குணமான மூன்றாங் காலெண்பத் தெட்டே (239)

எட்டான நாலாங்காற் பன்னி ரண்டு
    எழிலான விசாக முதற்கால் இரு தாளொன்பான்
தட்டான ரண்டாங்கால் நாலிதான் மூன்று
    தயவான மூன்றாங்கால் நாற்ப தாகும்
ஒட்டான நாலாங்கால் எண்பத் தொன்று
    பாங்கான அனு ஷமுதற் கால்தான் சாவு
சிட்டான ரண்டாங் காலிருப தப்பா
    செயலான மூன்றாங்கால் தொண்ணூ றென்னே (240)

என்னவே நாலாங்கால் நாற்ப தாகும்
    எழிலான கேட்டை முதற்கால் தான்சாவு
நன்னவே ரண்டாங் காலிருப தப்பா
    நாயகனே மூன்றாங்கால் முப்பத் தொன்று
வன்னவே நாலாங்கா லெண்பத் திரண்டு
    வளமான மூலமுதற்கால் தான் சாவு
அன்னவே ரண்டாங் காலொன்ப தாகும்
    அடவான மூன்றாங்கால் நாள்தான் பத்தே (241)

பத்தான நாலாங்கால் பதினெட் டாகும்
　　பன்பான பூராட முதற்கா லொன்பான்
சித்தான ரண்டாங்கால் மரணஞ் செய்யு
　　செயலான மூன்றாங்கால் நாள்தான் பத்து
வித்தான நாலாங் காலொன்பத்தி நாளு
　　விதமான உத்திராட முதற் காலேழு
நித்தான ரண்டாங் காலிருப தாகும்
　　நேரான மூன்றாங் காலன்ப தாச்சே (242)

ஆச்சப்பா நாலாங்கால் நாற்ப தாகும்
அடவான ஓணமுதற் பதினொன் றப்பா
பேச்சப்பா ரண்டாங்கால் பத்து நாளாம்
பேதமில்லை மூன்றாங்கால் நாள்தா னெட்டு
வீச்சப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
விதமான அவிட்ட முதற்கால் தானொன்பான்
நீச்சப்பா ரண்டாங்கால் பதினைந் தாகும்
நிசமான மூன்றாங்கால் முப்பத்தி ரண்டே (243)

இரண்டான நாலாங்கால் முப்பத் தொன்பான்
நிசமான சதயமுதற் கால் தானேழு
வண்டான ரண்டாங்கால் பத்தாம் பாரு
வளமான மூன்றாங்கால் நாள் தானாலு
திண்டான நாலாங்கால் நாள் தானைந்து
திறமான பூரட்டாதி முதற்கால் சாவு
கொண்டான ரண்டாங்கால் பதினா றாகும்
குணமான மூன்றாங்கா லெழுத் தொன்றே (244)

ஒன்றான நாலாங்கால் நாற்பத் தொன்று
ஒளிவு உத்திரட்டா திமுதற் காலேழு
நன்றான ரண்டாங்கால் பதினெட்டி டாகும்
நலமான மூன்றாங் காலேழாம் பாரு
குன்றான நாலாங்கா லிருபத் தெட்டு
குணமான ரேவதியு முதற்கால் சாவு
அண்டான ரண்டாங்கால் பதினொன் றப்பா
அடவான மூன்றாங்கால் பதினெட்டரை டாமே (245)

ஆமேநீ நாலாஞ் சாலிரு பத்தாறு
அடவான மரணமென்ற நாள்தான் சொல்வேன்
வாமேநீ அருக்கநாள் பரணி யாகச்
வளமான திங்கட் சித்திரையு மாகா
தாமேநீ செவ்வாய்க்கு உத்தி ராடஞ்
தயவான புதனுக்கு அஸ்தந மாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டை யாகா
நலமான புகர்நாள் பூராடந் தீதே (246)

தீதான சனிநாள் ரேவதியு மாகா
தீங்குவரு மின்னாளில் நோய்கள் கண்டால்
வாதான நமனுக்கு அமிதி யாகும்
வந்தநோய் தீராது கொல்லுங் கொல்லும்
தானான வயித்தியரே நாளைப் பார்த்து
தயவாக வயித்தியங்கள் செய்ய வேணும்
கோனான போகருட கடாட்சத் தாலே
கொற்றவனே புலிப்பாணி சொன்னேன் பாரே (247)

பில்லிக்குத் தவளை

தாலே தானின்னமொன்று சொல்லக் கேளு
    தனிக்கட்டுச் சிரகத்தி இலையை வாங்கி
வாதைதான் கசக்கியதை தடவும் போது
    வளமான வெடிபில்லி யொழிவு வீக்கம்
கோவேதான் மேலெரிப்பு லூரம் பில்லி
    குணமாகும் பார்வை முதல்திட்டி தீரும்
ஆமேதான் போகருட கடாட்சத் தாலே
    அடவாகப் பாடுகிறேன் புலிப்பாணி யாமே (256)

குமட்டிக்காம்பதங்கம்

ஆமேகேள் குமட்டிக்காம் பதங்கஞ் சொல்வேன்
[illegible]
அப்பனே தழுதழையு மாவிப் பட்டை
தாமேநீ கொடிவேலி யமுக்க ராவேர்
தயவாகப் பாவட்டை முடக் கற்றாழம்
வாமேநீ வெள்ளச் சாரணையுங் கூட
வளமான சத்திச்சார ணையு மப்பா
நாமேநீ வகையுடனே நல்லவேளை
நலமான தூ தவளை சடைச்சி யாமே (257)

ஆமப்பா குப்பை யெவிற மேலிகட
அடவாக சிவல்வேம்பு அவரிக் கட்டி
தாமப்பா வில்வவேர் மாவிலி ங்கநீ
தயவாக பிறம்பிசட விழுதிக் கொடு
வாமப்பா வகைவகைக்கு பலந்தாவி வேறு
வளமாகத் தூ க்கிச் குறுணமே செய்து
கோமப்பா சரக்குவகை சொல்லக் கேரு
குணமாகப் போககுட கடாட்சத் தாவே (258)

தாவென்ற சுக்குடனே கிராம்பு ஓமம்
        தயவாக தேசவரஞ் சிறு நாக்ப்பூ
வாவென்ற மிளகுதாளி சையாம் பத்திரி
        மைந்தனே திப்பிலிவால் மிளகு கட்டு
காவென்ற திப்பிலியின் மூல மப்பா
        கருவான சதகுப்பை பரங்கிப் பட்டை
கோவென்ற அரத்தை அதிவிடையங் கூட
        குணமான கருஞ்சீரகத் கந்தாளி கட்டே (259)

கட்டப்பா வகைவகைக்கு விராக வைந்து
குணமாகச் சூரணமாமிச் செய்து கொண்டு
நாட்டப்பா இருளருங் கல்வத் திட்டு
நலமான திருகுகள்ளிப் பால்தான் கேளு
மாட்டப்பா விராகவிடை யைந்து வாகு
மைந்தனே வேலியென்ற பருத்திச் சாறு
அட்டப்பா கொள்ளமட்டும் விட்டு ஆட்டி
அப்பனே மைபோலே யரைத்து லர்த்தே (260)

உலர்ந்தபின்பு குமட்டிக்காய் கொண்டு வந்து
உத்தமனே விரைசதையும் போக்கிப் போடு
அலர்ந்தபின்பு அதிற்செலுத்தி வாயை மூடி
அப்பனே பாண்டத்தி லுள்ளே வைத்து
மலர்ந்தபின் மஞ்சட்டியில் மஞ்சிலை செய்து
மைந்தனே குழிவெட்டிப் புதைக்கக் கேளு
கலர்ந்த பின்பு வெள்ளாட்டு எருவைக்கொட்டி
கனமாகப் பாண்டத்தைப் புதைத்துப் போடே (261)

போட்டப்பால கூட்ட மதாகப் போடு
        பொற்கமுடன் கருகாமலெடுத்துக் கொண்டு
நாடப்பா தூளையெல்லாம் ஒன்றிக் கொட்டி
        நலமாக நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
கூடப்பா சாதிக்காய் வீராகன் பத்து
        குணமாறா குங்குமப்பூ வீராகன் பத்து
ஆடப்பா பொடியைச் சூரணமாய்ச் செய்து
        அப்பனே வெருகடியாம் கொண்டி டாயே (262)

கொண்டபின்பு எருமைமோர் சோறு மூன்று
    கொற்றவனே உப்பதுதான் வருத்தக் கூட்டு
கண்டபின்பு மற்றதொன்று மாகா தப்பா
    கருவான மூன்று நாளாறு வேளை
உண்டபின்பு வயறுளைந்தால் நிறுத்திப் போடு
    உத்தமனே யில்லாவிட்டால் மருந்தை யுண்ணு
விண்டபின்பு போகருட கடாட்சத் தாலே
    விதமாகப் புலிப்பாணி விளம்பி னேனே (263)

விளம்புகிறேன் நோய்தீரும் விவரங் கேளு
    விதமான வாதமொடு வாத சூலை
தளம்புகிறேன் காலுகை முடக் கினாலும்
    தயவில்லா பச்சமென்ற வாதம் போகும்
கிளம்புகிறேன் சீரணமும் பொருமல் தீரும்
    கிருபையுடன் வயிற்றுவலி குன்மம் போகும்
அளம்புகிறேன் போகருட கடாட்சத் தாலே
    அன்பாகப் புலிப்பாணி அளி னேனே (264)

சூதச்செந்தூரம்

அருளாலே யின்னமொன்று சொல்லக் கேளு
அடவான கெந்தகந்தான் விராக னொன்று
பொருளான ரசமதுதான் விராக னொன்று
பொங்கமுட விருசரக்குக் கல்வத் திட்டு
மிருளாலே சிற்றாமணக் கெண்ணெய் விட்டு
மீறாமல் மெழுகது போலரைத் தருட்டி
திருளாலே நாற்பட்டு மேலே சுற்றி
திறமாகக் கொடிவேலிப் பட்டை கேளே (265)

கேளேநீ ட்டையைத்தான் தண்ணீர் விட்டுக்
கிருபையுடன் அரைத்திருத்து கவசம் கட்டி
நாளேநீ குபுகையினுள்ளே சிப்பித் தூளை
நன்றாகத்தான் போட்டு மேலே வைத்து
குளேநீ மேலுமந்தப் பொடியைப் போடு
சுகமாக சில்லிட்டுமண் சீலை செய்து
தாளேநீ சாணுயிற் புடத்தைப் போடு
தயவாகப் புடமிட்டுச் செந்தூர மாமே (266)

ஆமப்பா நோய்க ளெல்லாமகன்று போகும்
அடவாக தேகமது சிவந்து மின்னும்
போமப்பா பெரியோர்கள் கடாட்சஞ் செய்வார்
பொங்கமுடன் தேவதைகள் கிருபை கூறும்
தாமப்பா சிந்தூர முண்டோர்க் கெல்லாம்
தாழ்வொன்றும் வாராது கன்மந் தீரும்
நாமப்பா போகருட கடாட்சத் தாலே
நலமாகப் புலிப்பாணி பாடி னேனே (267)

கெந்தகரர்சாயனம்

பாடினேன் கெந்தகந்தான் வேண மட்டும்
        பாங்காக வாங்கிவந்து சொல்லக் கேளு
ஆடிய கலசமதில் பசுவின் பாலை
        அடவாகத் தானூற்றிப் புதைத்துப் போடு
கூடியே சிறுகலசந்த மர்கள் போட்டு
        குணமான பாற்கலச் மேலே வைத்து
நாடியே கெந்தகத்தை யிதற் குள்ளிட்டு
        நாயகனே சில்லிட்டுச் சீலை செய்யே (268)

செய்தபின்பு புலகு புடமதாகப் போடு
சிறப்பான கெந்திய ருதிம தாச்சு
செய்தபின்பு அதையெடுத்துக் கழுவிப் போட்டு
குழியம்மி தன்னில் நீர்ப்பூண்டின் சாற்றில்
பெய்தபின்பு தவையரைப்பாய் சாம மைந்தா
பாங்காக அதையெடுத்து வைத்துக் கொண்டு
செய்தபின்பு வீராக வெடைபாதி தானும்
தீவிரமாய்ப் பலவெல்லந் தன்னிற் கொள்ளே (269)

கொள்ளவே மண்டலத்தில் குட்ட ரோகம்
குணமான வெண்ணையொடு கடுப்புந் தீரும்
தள்ளவே சொரிசிரங்கு மேக ரோகம்
தடிப்புடனே செவ்வட்டை கடிர வங்கள்
விள்ளவே பத்தியந் தானிதற் கோவில்லை
விதமான நெய்பாலு தயிர் மோருண்ணு
அள்ளவே போகருட கடாட்சத் தாலே
அடவாகப் புலிப்பாணி அருளி னேனே (270)

வேறு

அருளாலே யின்னமொன்று சொல்லக் கேளு
அடவாக ஆலரசு இச்சிப் பட்டை
பொருளாலே வகைவகைக்கு பலத்தாள் பத்து
புகழ்ந்திடித்துப் பாண்டத்தில் போட்டுப் பின்பு
திருளாலே முன்றுடனே சலத்தை விட்டு
திறமாகக் காச்சியதை மேலே வாரு
இருளாலே யீராறுநாள் தான் வாரு
இதமாக அந்திசந்தி மருந்தை யுண்ணே (271)

உண்ணப்பா சிவகரந்தை விஷ்ணு கரந்தி
    உத்தமனே அரைத்து முள்ளிக்கா வீதம்
பண்ணப்பா கொள்மூல முளைக ளெல்லாம்
    பதரியே புதிர்ந்து விடும்கண்டு பாரு
நண்ணப்பா பத்தியங்களிதற் கோயி ல்லை
    நாயகனே யீராறு நாளுக் குள்ளே
திண்ணப்பா தீர்ந்து விடும்கண்டு பாரு
    திறமான போகருடக் கடாட்சந் தானே (272)

பயித்தியந்தீர

தானென்ற சிறுகீரை வேரைத் தானும்
    தானரைத்து எலுமிச்சம் காய்தன் வீதம்
வானென்ற மூன்று நாளாறு வேளை
    வளமாக வெந்நீரிற் கொடுத்துப் பாரு
கோனென்ற ஆறாறு நாளும் பாகாது
    கொற்றவனே யேழா நாலெல்லா மாகும்
ஊனென்ற பயித்தியந்தான் தீர்த்து போகும்
    உத்தமனே போகருட கடாட்சந் தானே (273)

தானப்பா இப்பாகம் நீர்க்கடம்பு வேரை
தான்கொடுப்பாம் பயித்தியந்தான் தீரும் பாரு
வானப்பாக வுறம்பை மீறு பூண்டு
வளமாக நசியமிடு ஆறு வேளை
சீனப்பா மயக்கமுதல் கிறு கிறுப்பு
சிறப்பான அருநிலைவுந் தீர்ந்து போகும்
ஆனப்பா போகருட கடாட்சத் தாலே
அடவாகப் புலிப்பாணி பாடி னேனே (274)

சகுனம்

பாடினேனின்ன மொன்று சொல்லக் கேளு
　　பண்பில்லா தலைவிரித்தல் மொட்டை யப்பா
நாடினேன் சன்னாசி செட்டி தட்டான்
　　நலமான குயவன் மூக்கரையன் செக்கான்
கூடினேன் நாவிதனும் பிளி நோயாளன்
　　குணமில்லா கட்டையொடு விறகு யாக்கை
சூடினேன் கயிறு சக்கிலி மாகா
　　சுனைகெட்ட வழிக்குண்டி யாகா தென்றே (275)

ஆகாது புகையோடு பின்பு தும்மல்
　　அப்பனே அழுகை யொடுமுசலு மாகா
வாகாது நீர்ப்பானை யுடைத்த போது
　　வழியிலே யடித்து விழுக்கானப் போகா
பாகாதுமரம் வெட்டல் அடியுஞ் சலிடை
　　பண்பான கட்டிலொடு நாற்காலி முக்காலி
சோகாது இவைமூன்று மலர்ந்து கண்டால்
　　சுருக்கப்பா மரணமொன்று சொல்லிப் போடே (276)

போட்டீ தேவதைகள் ராசா யானை
பொலிவான பூஷணமாம் பெஞ்களி பிரிளை
நாட்டீ பூரணமாம் கும்பத் தோடு
நலமான தயிரோடு பாலப் பானை
சூட்டீ குதிரையொடு வேதியர் கூட்டம்
சுகமான குடைசுருட்டி சிவிகைச் சுவிகு
ஆட்டீ வெண்சாமரை சுகந்த புஷ்பம்
அப்பவே வாத்தியங்கள் கேட்க நன்றே (277)

சுரங்களுக்கு_கியாழம்

நன்றாக இன்னமொன்று சொல்லக் கேளு
        நலமான தூதுவளை கண்டங் கத்திரி
பன்றாக நிலவேம்பு முத்தக் காசு
        பாங்கான ஆடாதோடை விஷ்ணு காந்தி
குன்றாத படகம் சீந்தித் தண்டு
        குணமான சிற்றாமுட்டி வேரி னோடு
அன்றாத செந்தொட்டி மூல மப்பா
        அடவான வேம்புடைய பட்டை தானே (278)

பட்டையப்பா சுக்குக மாதளையின் வேரும்
        பாங்கான தும்பைப் பேய்ப்புடலுங் கூட்டி
திட்டமாய் நாய்த்துளசி வேரு மையா
        திசமாக வகைவகைக்கு விராகன் பத்து
தட்டையாம் உரல்தனிலே யிடிக்கும் போது
        தனியாக சரக்குவகை சொல்லக் கேளு
நட்டமாம் தேக்குதாளிச மாம் பத்திரி
        நலமான சுக்குடன் சிற்றரத்தை யாமே (279)

ஆமேதான் தேசாவரந்திப் பிலி யப்பா
அடவாக வகைவகைக்கு விராகன் மூன்று
தாமே தானிவையெல்லா மிடித்துத் தோண்டி
தயவாக ஆழபங்கு வைத்துப் பின்னே
வாமேதான் பாண்டத்தி லெடுத்துப் போட்டு
வளமாக ரண்டுபடி சலத்தை விட்டு
போமே தானெட்டொன்றாய் குறுக்கி யப்பா
பொங்கமுடன் மூன்றுநாள் கொடுத்தி டாயே (280)

கொடுத்திடுநீ மூன்று நாளாறு வேளை
குணமாகும் புளியுகையு மோருந் தள்ளு
அடுத்திடவே கொடுத்திடு வாயிந்தப் பாகம்
அப்பனே சுரமென்ற தெல்லாந் தீரும்
கடுத்திடுநீ யிருமிஞ்சி சுரமே வந்தால்
தற்கமொன்று சொல்லுகிறேன் கனிந்து கேளு
வடுத்திடுந் திப்பிலி சுக்கு சித்திரத்தை
வளமான தேசாவரந் கோஷ்ட மாமே (281)

ஆமேதான் தேக்கு அதிமதுரம் கிராம்பு
அப்பனே கருஞ்சீரம் வாய் விளங்கம்
போமேதான் தாளிச பத்திரி மாஞ்சில்
பொன்கரடன் மிளகுடனே அக்கிரா காரம்
தாமேதான் விடயமதி மதுரங் கட்டி
தயவாக வகைவகைக்கு விராகனி வாங்கி
வாமேதான் பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு
வளமாகப் பொடிபண்ணி வறுத்துக் கொள்ளே (282)

கொள்ளேநீ இஞ்சியைத்தான் சுரசஞ் செய்து
குழைாக வெருகந்தாக் பொடியைப் போட்டு
அள்ளேநீ மூன்று நாளாறு வேளை
அப்பசேன கொடுத்தவுடன் தீரும் பாரு
தள்ளேநீ ஜீரமிஞ்சி யதிக மானால்
தயவான தோஷசன்னி அடுத்த தானால்
சுள்ளேநீ சிறியுடன் மாவிலிங்கம்
லிகமான நொச்சியுடன் முருங்கை யாமே (283)

ஆமேநீ ஆவியுடன் சங்கம் வேரும்
    அப்பனே யிந்தவகைப் பட்டை யெல்லாம்
தாமேநீ யிஞ்சியுடன் சிந்த ரத்தை
    தயவாக இவையெல்லாம் சுரசம் வாங்கி
வாமேநீ பூநாகம் பொடி வறுத்து
    வகையாக விராகனை பொடியும் போட்டு
போமேநீ வெருகடிமுன் பொடியில் போட்டு
    பொலிவான தேனொரு காசெடைதான் வாரே (284)

வாரேதான் முலைப்பாலு முள்ளிப் பாலு
    வளமாக முசுறுமுட்டைப் பாலுஞ் சேரு
கூரேதான் வெள்ளுள்ளி தயிலங் கொஞ்சம்
    குணமான பாலுடையயி(யீ ஸ்டு கொஞ்சம்
நேரேதான் கோழியுட முட்டை கொஞ்சம்
    நிச்சயமாம் கஸ்து ரி ரோசனையுங் கட்டி
சாரேதான் கொடுத்திடு வாயாறு வேளை
    சாந்தமாய்ப் போகுமடா கண்டு பாரே (285)

பாரேநீ வலிப்புடைய சன்னி தோஷம்
　　பரக்குமடா இம்மருந்து கண்ட போதே
சேரேநீ விதியிருந்தால பிக்கும் பாரு
　　திறமாக சாத்திய மசாத்தியமுங் காணும்
வீரேநீ சாத்தியந் தானிருந்தால் செய்நீ
　　வீதமாம் சாத்திய மென்றால்செய் யொணாது
கூரேநீ போகருட கடாட்சத் தாலே
　　கொற்றவனே புலிப்பாணி பாடி னேனே (286)

நாவிற்றடவ கண்டாவிமுதம்

பாடினேனின்னொரு மொழிற சொல்லக் கேளு
பாக்காகப் பொன்வெள்ளி பவளம் சிங்கி
நாடினே னாமையென்ற வோடு மப்பா
நலமா னவில்வேர டுவிளா வி னோடு
கூடினேன் கிராம்பு அதிமதுரம் சுக்கு
குணமாக தேசாவரம் திப்பிலி இரத்தை
ஆடினேனை ருத்திராட்ச மிவையெல்லா நீதான்
அடவாக முலைப்பாலி லுரைத்தி டாயே (287)

உரைத்தெடுத்து மயிற்பீலி சுட்ட சாம்பல்
உடன் சத்திராவுதனில் தளமாய்ப் போட்டு
கரைத்தெடுத்து நாவதனில் சலந்தா ணாகும்
கனிவில்லா தோஷமது தணியும் பாரு
மறைத்தெடுத்த பேய்த்துமட்டி வேரைத் தட்டி
மைந்தனே கொடுத்துவிடு அடக்கிக் கொள்ள
துரைத்தெடுத்த தேகத்தில் வந்த தோஷம்
துப்பமது தான்விலகும் கண்டு பாரே (288)

தாகத்துக்கு விராழம்

பாரேதான் விளாவிலை யூமாடா தோடை
பாங்கான அரசிலுட கொழுந்து மப்பா
சேரேதான் வகைவகைக்கு பிடிதா னொன்று
சிறப்பான மலும் அரைபடிதான் போட்டு
கூரேதான் முந்திரிக்காய் மதுரந் தானும்
குணமாக வகைஒன்று விராக னொன்று
வீரேதானிவை யெல்லாங் கருகு மட்டும்
விதமாகத்தான் வறுத்து தண்ணீர் வாரே (289)

வார்த்தப்பா தாளெரித்துக் குருகக் காய்ச்சி
        வடிகட்டிதான் கொடுப்பாய் தாகந் தீரும்
கோர்த்தப்பா இந்தவித மூன்று நாளும்
        கொடுத்திடவே தாகமென்ற தெல்லாந் தீரும்
பார்த்தப்பா சுரதாகம் உஷ்ண தாகம்
        பரிவான அந்திர தாகம் பாவைதாகம்
போர்த்தப்பா குடிநீரைக் குடித்த போது
        பொங்கமுடன் தீருமடா தின்னந் தானே (290)

வாயுக்குளுக்கு

தின்னமாய்ச் சுக்கும்வேர் முக்கொ முஞ்சி
        திறமான கொடிவேலி பரங்கி பட்டை
வன்னமாய்ச் சுக்குடனே வாய் விளங்கம்
        வளமான சிறுதேக்கு கொத்த மல்லி
என்னமாய் வகைவகைக்கு விராகன் ரண்டு
        இடித்தெடுத்து பாண்டத்தி லிதமாய்ப் போட்டு
நன்னமாய்ச் சலமதுதான் படிதான் விட்டு
        நாயகனே யெட்டொன்றாய்க் குருக்கி வாங்கே (291)

வாங்கியே மிளகதுவும் விராக னொன்று
வளமாகப் பொடிபண்ணி யிதனிற் போட்டு
தாங்கியே விளக்கெண்ணெய் சுட்டெடைதாக் விட்டு
தாள்கொடுப்பாய் மூன்று நாளாறு வேளை
யேங்கியே புளிபுகையுந் தவிரு தவிரு
யிதமான வாயுடனே மேக வாயு
வோங்கியே மேல்கடுப்பு புளித்த யேப்பம்
வோடிவிடும் வாயுவெல்லாந் தீருந் தானே (292)

சூட்டுக்கு குடிநீர்

திருமேயின்ன மொன்று சொல்லக் கேளு
    திறமான இளநீரு படிதான் மூன்று
ஆருமே யெலுமிச்சம் பழச்சார் நாழி
    அப்பனே சுன்னநீர்த் தெளிவு தானும்
ஏருமே படியரைதான எந்து வாரு
    இசையான குமரிச்சார் பலந் தானாறு
வீருமே சீரகமும் பலந்தா னொன்று
    விதமான ஏலமரைப் பலந்தான் போடே (293)

போடேநீ ஏலமதைப் பொடித்துப் போடு
    பொங்குமுடன் புதுச்சட்டி தன்னில் சேர்த்து
நாடேநீ மனலிட்டு ஈரஞ் செய்து
    நாயகனே யிதுமேலே சட்டி வைத்து
கூடேநீ யீரச்சீலை யதனால் மூடி
    குணமாக வைத்திருநீ பகற்காலந் தான்
சாடேநீ ராக்காலம் பனியில் வைத்து
    சார்வாக மண்டலமும் கல்தான் கொள்ளே (294)

கொள்ளவே கால்படி தானந்தி சந்தி
குணமாகக் குமரிச்சார் பலமுங் காலு
உள்ளேநீ கொண்டுவர இந்த பாகம்
உத்தமனே நீரெரிவு ரத்தம் வெள்ளை
தள்ளேநீ பூள்ளெரிவுந் கடுப்புந் தீரும்
தயவில்லா காங்கையது தணியும் பாரு
அள்ளேநீ போகருட கடாட்சந் தாலே
அடவாகப் புலிப்பாணி பாடிநீ வேளே (295)

உஷ்ணகாங்கைக்கு குடிநீர்

தானேதானின்ன மொன்று சொல்லக் கேளு
    நயவான அருகன் வேர்நெருஞ்சில் வேரும்
மானேதான் முருங்கையுட ஈர்க்கு மப்பா
    மைந்தனே வகைவகைக்கு பிடிதா னொன்று
வானேதான் பொடிப்பொடியாய் நறுக்கி பொன்போல்
    வறுக்கையிலே சீரக மிளகும் போட்டு
ஆனேதான் கசகசா விராகன் ரண்டு
    அப்பனேதான் போட்டு சலத்தை வாரே (298)

வாரேநீ படிசலந் தாவெட்டொன் றாக்கி
    வளமாகப் பசுவெண்ணெய் கஞ்சி போட்டு
சேரேநீ கொடுத்தவுடன் உஷ்ண காந்தல்
    சேர்ந்து வந்த வயர்வலி கடுப்புந்தீரும்
கூரேநீ யிந்தவித முன்றுநாள் தான்
    கொடுத்திடவே உஷ்ணத்தால் காங்கை தீரும்
தீரேநீ போகருட கடாட்சத் தாலே
    திறமாகப் புலிப்பாணி சொன்னேன் தானே (299)

குடைச்சலுக்கு தயிலம்

தாளையா மயிற் பீலி வலந்தான் ரண்டு
 தான்போட்டு சட்டியிலே கருக்கிக் கொண்டு
வாளையா மனோசிலைதான் விராகன் பத்து
 வளமாகத்தான் போட்டு உருகும் போது
சேளையாவேப் பெண்ணெய் படிதான் விட்டு
 செயலாகத் தானெரித்து எடுத்துக் கொண்டு
மாளையா பூசியக்லோ பிடிக்கும் போது
 மைந்தனே குடைச்சல் முதல்தீத்துப் போமே (300)

போமேநீ யிலைக்கள்ளி கொண்டு வந்து
        பொடிப்பொடியாக் கண்டமதாய் நறுக்கிப் போட்டு
நாமேநீ சலமதுதான் பதக்கு விட்டு
        நலமாக எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு
தாமேநீ மருசட்டி தனிலி றுத்து
        தயவாக வெள்ளாட்டு அமுரி தானும்
வாமேநீ படிரண்டு கூட விட்டு
        வளமாகப் பாகுபோல் காய்ச்சி டாயே (301)

காய்ச்சியே மேலெங்கும் பூசச் சொல்லி
        கனிவாக ஆட்டுத்தோல் கலைத்தோல் தன்னில்
ஆச்சியே படுத்திருக்கச் சொல்வாய் நீயும்
        அப்பனே சாயநட்டை இதிலேறி லேகு
வாச்சியே நொச்சியிலை முடக்கற் றானும்
        வளமாகத் தழுதாழை மாவி லிங்கம்
தாச்சியே மேனியுடன் குப்பை கொண்டு
        தயவாகப் பூவரசம் பட்டை யாமே (302)

ஆமேநீ வெட்டி பாவட்டை வாகை
அடவான எருக்கம்பூ கடம்பின் பட்டை
தாமே காட்டெலு மிச்சையிலை யீனோடு
தயவாக உத்தாமணி திருகு கள்ளி
வாமேதான் விறப்பையூட பட்டை தானும்
வளமான நெல்லுயிப்பூ மிலைக ளெல்லாம்
போமேதான் சலம்விட்டு வேக வைத்து
பென்க்கமுடன் மூன்றுநாள் போத வாரே (303)

வாரேதாள் அந்திசந்தி வார்த்த போது
வளமில்லா சூலையொடு பிடிப்பு தானும்
மீரேதாள் கால் குடைச்சல்கை குடைச்சல்
மிகுந்ததொரு மேல்கடுப்பு குத்தத் தீரும்
பாரேதாள் சருவாங்க வாதம் போகும்
பல்பாவ புடைசூலை கரணை பாதந்
தீரேதாள் மூடு போககுட கடாட்சத் தாலே
திறமாகப் புலிப்பாணி சொன்ன தாமே (304)

மாந்ததோஷத்துக்கு குளிகை

தாமப்பா இன்னமொன்று சொல்லக் கேளு
தயவான வில்வமப்பா விளாவும் வேளை
மாமப்பா நாய்வேளை கஞ்சாங் கோரை
மைந்தனே சிவனியொடு காட்டு மொச்சை
தேமப்பா திருநீற்றுப் பச்சை தும்பை
தெளிவான சிறுதும்பை கண்டங் கத்திரி
வாமப்பா அமுக்கரா சங்குத் தாங்கி
வளமான தனாவேலிப் பருத்தி யாமே (305)

ஆமேதான் முடக்கற்றான் வெரிகா சேவளை
அடவான சாரணையு முட்டை நாறி
தாமேதான் கொழுஞ்சிவேர் புளியாரிப் பூடு
தயவான பிரமியொடு சித்திர மூலம்
வாமேதான் கொடிவேலுடன் மயிர் தக்காளி
வகையான கையாந் கீழ்க்காய் நெல்லி
போமேதான் இந்தவகை மூல மெல்லாம்
பொங்கமுடன் வகைவகைக்கு களஞ்சி ஆக்கே (306)

ஞாக்கப்பாவ சம்புடவே ஓமஞ் சுக்கு
குன்பமில்லா சதகுப்பை திரிகடுகு கூட
வாக்கப்பா தேசாவர மரத்தை கோஷ்டம்
வளமான சாதிக்காய் வெள்ளைப் பூண்டு
ஊக்கப்பா குருசு சீரகமுங் காயம்
அடர்கோ ரோசனைகடுஞ் சீரகமு மப்பா
தாக்கப்பா வகைவகைக்கு களஞ்சி யொன்று
தானூக்கி கல்வத்தி லரைத்தி டாயே (307)

அரையப்பா அப்பைச் சார்நாய் வேளைச்சார்
அடவான அகத்திச்சா ரிட்டம் பாலும்
குரையப்பா சாமமது மயனம் போலே
குருசாக ரங்கு பங்கு ஆக்கியப்பா
விரையப்பா குவரை போலுருட்டிப் போடு
விதமாக வொருபக்கில் விவரங் கேளு
இரையப்பா சுத்திசெய்த வாளந் தானும்
இதமாகக் கடுகு ரோகணியும் பாரே (308)

பாரப்பா வகைவகைக்கு களஞ்சி ஞாக்கி
பாங்காக முன்மருந்தை யிதிலே சேர்த்து
வாரப்பா அகத்திச்சார் நிலவாகைச் சார்
வளமாக விட்டரைப்பாய் சாம மூன்று
வீரப்பா துவரை போலுருட்டிச் சேர்த்து
விதமாக நிழலுலர்த்தி யெடுத்துக் கொண்டு
நேரப்பா குழந்தைகள் தம்பிணி கட்கெல்லாம்
நிச்சயமாய்த் தான்கொடுக்கத் தீரும் பாரே 9 (309)

பாரேதான் அப்பைச்சார் நாயிவேளைச் சார்
    பன்பான துளசிச்சார் சிறுதம்பைச் சார்
வீரேதான் வெருமுட்டை நாறிச் சாறும்
    விதமான காட்டு மொச்சையிலைச் சாரப்பா
கூரேதான் வயிறுகட்டிப் பிணிநோயுங் கண்டால்
    கொடுப்பாயே நேர்வாளஞ் சேர்ந்த தப்பா
தேரேதான் வயிரெடுத்துப் பிணிநோயுங் கண்டால்
    செலுத்திடுவாய் குளிகை இச்சாரெதிலுந் தீருந்தானே (310)

தீருமே மாந்தத்தின் வகைகள் யாவும்
    திறமான தோஷமொடு வலிப்பு காச்சல்
ஆறுமே அக்கினியில் மாந்த மப்பா
    அன்பில்லா அநேகவித நோயும் போகும்
கூறுமே சிசுவருத்தந் தீர்த்தோர்க் கெல்லாம்
    குற்றமொன்றும் வருகாது வறுமை நீங்கும்
வீருமே போகருட கடாட்சத் தாலே
    விதமாகப் புலிப்பாணி பாடி னேனே (311)

அரிதார பற்பம்

பாடினேனின்ன மொன்று சொல்லக் கேளு
பாங்கான அரிதாரக் கட்டி யப்பா
கூடிநீ கடுக்காய்த் தோல்நீரா லாட்டி
குணமாக மேல்கவசம் வலுக்கச் செய்து
நாடியேன் குகையிலிட்டுச் சில்லுமே போட்டு
நலமாக மண்சீலை வலுக்கச் செய்து
ஆடியேன் ரன்டெருவில் புடத்தைப் போடு
அடவாக பற்பத்தை யெடுத்துக் கொள்ளே (312)

கொள்ளேநீ பொடிபண்ணி வைத்துக் கொண்டு
குணமாக தேனதிலே விராகன் கால்தான்
அள்ளிநீ கொடுத்தவுடன் சுரங்கள் யாவும்
அப்பனே அகன்றோடிப் போகும் பாரு
தள்ளேநீ யிருமலொடு பாண்டு சோகை
தயவில்லா எலிகடியுந் தீரும் பாரு
சுள்ளேநீ பித்தமொடு மருந் தீரும்
சுகமான போகருட கடாட்சந் தானே (313)

தானப்பா புளியோடு புகையுந் தள்ளு
தயவான ஏழாநாள் நீரை வாரு
வானப்பா நீலிவேர் கியாழந் கொள்ளு
வளமாக மந்தாநா னெல்லாங் கட்டு
கோனப்பா குடிலங்க ளொன்று மில்லை
குணமாகுஞ் சயமுதலாய் சுரங்கள் போகும்
தேனப்பா போகருட கடாட்சத் தாலே
தெளிவாகப் புலிப்பாணி சொன்னேன் பாரே (314)

குன்மவாத்தியேப்பம் வாய்நீருக்குகியாழம்

பாரேநீ யேலமொடு நெல்லி முள்ளிப்
பாங்கான பசுபயறு மிளகு கூட
இதுஇது
சேரேநீ நெற்பொரியும் வில்வ வேரும்
சிறப்பாக வகைக்குவகை சொல்லக் கேளு
தீரேநீ ரண்டரை தாம்பலம தாக
திறமாகத் தா ளாக்கி வைத்துக் கொண்டு
கூரேநீ ரண்டுபங்கு கஷமாய்ச் செய்து
கொற்றவனே யிளநீரம் நேரம் ரண்டே (315)

இரண்டான இளநீரிச் சலத்தி லப்பா
அறுவளவு பிசகாமல் மைபோ லாட்டி
கொண்டான பாண்டத்தி லெட்டொன் றாக்கி
கொடுப்பாயே யீராறு வேளை தன்னில்
கண்டான குன்மவகை வாந்தி யெப்பம்
கனிவில்லா வாயுநீரும் பொருமல் தீரும்
பாண்டான அன்னமது செரிக்கும் பாரு
பாங்கான அரோசியமும் வரப்பும் போமே (316)

போமப்பா பத்தியந்தான் சொல்லக் கேளு
பொங்கமுட னுப்பிட்ட பருப்பு மாகும்
ஆமப்பா பசுவின்மோர் வெந்நீ ராகும்
அடவான தூவளை பொன்னாங் காணி
தாமப்பா கொடிவிளாங் காய்நெல்லிக் காயும்
தயவான பசுவிடு நெய்தேனு மாகும்
வாமப்பா ஏழாநாள் சலத்தை வாரு
வளமாக எட்டாநாள் புளியைச் சேரே (317)

வயிற்றிரைச்சல்பேதிக்கு

சேரேநீ இன்னமொன்று சொல்லக் கேளு
செயலான மிளகுபல மிரண்டு வாங்கி
நேரேநீ வேலியுட பருத்திச் சாறு
நிறைய விட்டு ஊரவைத்து வுலர்ப்போடு
கூரேநீ வறுத்துமிகப் பொடியாய்ச் செய்து
கொற்றவனே வெருகடியாய்த் தேனிற் கொள்ள
வீரேநீ வயிற்றிரைச்சல் பேதி நீங்கும்
விதமான பொருமலுட வாயு போமே (318)

வயிற்றிரைச்சல் இரத்தக் கடுப்புக்கு

போமேநீ இன்னமொன்று சொல்ல கேளு
        பொலிவாக நீர்ப்பூண்டு பலந்தான் ரண்டு
ஆமேநீ யெருக்தாணி யிலையைத் தானும்
        அடவாக ரண்டுபல மெடுத்துக் கொண்டு
தாமேநீ நெய்தன்னிலே வதக்கி யமைத்தா
        தயவான ஏலமது விராக னொன்று
வாமேநீ சீனிபல மொன்று கட்டி
        வகையாகத் தானரைத்து எடுத்துக் கொள்ளே (319)

கொள்ளப்பா முள்ளிக் காய் விதமாக
        கொற்றவனே மூன்று நாளாறு வேளை
தெள்ளப்பா வயிற்றிரைச்சல் கடுப்பு ரத்தம்
        தெளிவில்லா மூலத்தின் கடுந் தீரும்
அள்ளப்பா பத்தியந் தானிதற் கோயில்லை
        ஐயனே தயிர்பாலும் நெய்யுங் கூட்டு
விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே
        விதமாகப் புலிப்பாணி பாடி னேனே (320)

முளைமூலத்துக்கு

பாடினேனின்ன மொழிந்து சொல்லக் கேளு
பண்பான கோவையுட இலையைத் தட்டி
நாடினேன் கம்மஞ் சோறாக்கிப் பின்னை
நலமாகத் தானருட்டி நீரை வாரு
கடுகிறே னெட்டுநாள் கடந்த சோறும்
கொற்றவனே முன்னிலையு மெடையாய்ச் சேர்த்து
ஆசூரேர் ஆறுநாள் கட்டும் போது
அடியோடே முளைமூல மகன்று போமே (321)

கெந்தகரசாயனம் ஐஞ்றுரைச்

ஆமேதான் கெந்தகத்தின் ரசாயனந் தன்னை
அடவாகச் சொல்லுகிறே னின்றாமிக் கேளி
தாமேதான் திரிகடுகு கிராம்பு யேலம்
தனிலவங்கப் பட்டையுடன் லவங்கப் பத்திரி
வாமேதான் சாதிக்காய் தாளிச பத்திரி
வளமான சிறுநாகப் பூவி னோடு
போமேதான் விலாமிச்சம் வேரும் ஓமம்
பொலஞ் சீரகம் குறோசாணி யாமே (324)

ஆமடா சிற்றரத்தை சித்திர மூலம்
அடவான திப்பிலி தன்மூலத் தோடு
நாமேநீ பூலாங்கி மூங்குயானைத் திப்பிலி
நலமான கருஞ்சீரகம் களக் நீரும்
தாமேநீ முந்திரிக்கை சந்தனக் கோலந்
தயவான அதிமதுரம் முத்தக் காசும்
வாமடா சடாமாஞ்சில் கொத்த மல்லி
வளமான போர்ச்சம் பழமு மாமே (325)

ஆமேநீ திரிபாலை சாதி பத்திரி
அடவாய வெட்டிவேர் குங்குமப் பூ
தாமேநீ நிலப்பனைவேர் அசவ செந்தி
தயவான நெரிஞ்சிமுள்ளி நீர்முள்ளி வித்து
வாமேநீ பூனையெத்த காலி வித்து
வளமாக வகைவகைக்கு விராக நாலு
போமேநீ நிறுத்தெடுத்துப் பொடியாக்கிச் செய்து
பொற்கலுடன் சத்திகெந்தி பலமும் நாலே (326)

நாலான பரங்கிபட்டை பாலில் சுத்தி
நாயனனே ஞாருபல மிருப தாகப்
பாலான சர்க்கரை தானப்பா கேளு
பாக்காகப் பலமது தானிருப தாக
கோலான சீனிசர்க்கரை தானப்பா
கொற்றவனே பலமதுத் தான்பத்த தாகும்
மேலான நீர்மிட்டால் கிழங்குச் சாறு
விதமாகப் படியாது பாண்டத் திட்டு (327)
சேலான பசுவிநெய் படிதா னொன்று
சிறப்பான தேன்படி தானொன்றாய்க் கூட்டே

கட்டப்பா பாகதுபோல் பதத்தைப் பார்த்து
கொற்றவனே இறக்கிவைத்துப் பொடியைப் போட்டு
ஆட்டப்பா கிளரியதை யெடுத்துக் கொண்டு
அப்பனே குயக்கலசந் தன்னில் வைத்து
நாட்டப்பா நெல்புடமும் பத்து நாள்தான்
நலமாகத் தான்வைத்து எடுத்துக் கொண்டு
ஊட்டப்பா பழற்சிக்காய் வீதம் கொள்ளு
உத்தமனே தீருநோய் விபரம் கேளே (328)

தீரும்வியாதிகள்

கேளேநீ வாதமது எண்பதுக் கும்
        கெடியான பித்தமது நாற்பதுக் கும்
சூளேநீ சிலேச்சுமந் களாறுக்குந் தான்
        சுகமில்லாக் கிரந்தி பதினெட்டுச் சூலை
நாளேநீ குன்மமொடு பாண்டு சோகை
        நயமில்லா க்ஷயரோக மேக மெல்லாம்
வாளேநீ அக்கினியின் மந்தந் தீரும்
        வளமான பரிதிகண்ட இருள்போல் போமே (329)

போமடா பத்துநாள் கொண்ட பிஞ்சு
        பொலிவான பத்தியந்தாக்ஷி சொல்லக் கேளு
ஆமடா பசும்பயறு துவரை யாகும்
        அப்பனே ஞா துவளை மணத் தக்காளி
தாமடாஜ கத்திரிக்காய் முருங்கைப் பிஞ்சு
        தயவான கொத்தமல்லிக் கீரை யாகும்
வாமடா புளியிப்பு பசுவி னெய்யும்
        வளமான மோர்தயிரும் பாலு மாமே (330)

வலிப்புகளுக்கு சாதிலிங்ககட்டு

ஆமேநீ யின்னமொன்று சொல்லக் கேளு
        அடவாக அஞ்சண்டம் வெண்கருவை வாங்கி
போமேநீ வீரமது பச்சைப் பூரம்
        பொலிவான வெடியுப்பு சுண்ணத் தோடு
வாமேநீ வகைவகைக்கு விராக னொன்று
        வளமாகப் பொடிபண்ணி வெண்கருவில் போட்டு
ஓமேநீ மஞ்சளுட கருவைப் போக்கி
        உத்தமனே வெண்கருவை யடைத்து வையே (331)

வையப்பா ஆறுநாளி கடந்த பின்பு
      வகையாக கலிங்கமது விராகனி பத்து
கையப்பா வெண்கருவில் தோய்த்து தோய்த்து
      கனிவாகர விதனிலே கணக்காம் பத்து
வையப்பா கருமத்தின் தழைமேல் சுத்தி
      பாருமனத் புடந்தால் முப்பத் திரண்டு
செய்யப்பா யிந்தவிதந் தோய்த்துச் சுத்தி
      செயலான ஒன்றெரு முப்பத்தி ரண்டே (332)

இரண்டான புடந்தனக்கு உபரி யென்று
     ரேசிப்பாம் புடம்பத்து ஏற்றிக் கொள்ளு
கண்டான லிங்கமது உருகி கட்டும்
     கனிவாகத் தானதையே யெடுத்துக் கொண்டு
பண்டான இந்திரந் தன்னிற் கொள்ள
     பணவிடைதான் கனக்கா பூரைத்துப் போடு
தெண்டான மூன்று நாளாறு வேளை
     திண்மாரித் தான்கொடுக்க தீரும் பாரே (333)

பாரேநீ முசல்கண்டன் குமர கண்டன்
     பரிவான முசல்வலியன் குதிரைக் குட்டி
சேரேநீ காக்கைவலி பிறவீச் சோடு
     சிறப்பான உள்வீச்சு சன்னி தோஷம்
கூரேநீ வாலையென்ற கிறுக்கை யோடு
     குணமான நெஞ்சுமுதல் வாயுக் குத்து
வீரேநீ பிணிகளெல்லாந் தீரும் பாரு
     விதமான இருள்கண்ட சுடர்போல் போமே (334)

சீரகச்சூரணம்

கொள்ளவே யின்னமொன்று சொல்லக் கேளு
    குணமான சீரகமே பலந்தா னைந்து
தெள்ளவே வாங்கிவந்து பீங்கான் தன்னில்
    தெளிவாகத் தான்போட்டு பழச்சார் வாரு
அள்ளவே மிதக்கவிட்டு ஊற வைத்து
    அடவாக நிழல்தனிலே புலரப் போட்டு
விள்ளவே தானெடுத்து இந்த பாகம்
    விதமாகத் தான்போட்டு விவரம் பாரே (339)

பாரேநீ கருப்பான் சாற்முந்சு முசுக்கை
பாங்காக நெல்லிக்காய் சாறுங் கூட
சேரேநீ ஞா துணைச் சாற்றி னோடு
செயலான வெம்பிலிபட்டைச் சாறு மாகும்
தீரேநீ தும்பையிலைச் சாறும் விட்டு
திறமாக வெள்வேறாய் யூலரப் போட்டு
சீரேநீ ஞா விடத்து வடிதான் கட்டி
சீஷியது காலபங்கு பலந்து கொள்ளே (340)

கொள்ளப்பா அந்திசந்தி நாற்பது நாள்கொள்ள
குணமாக வெருகடிதான் வீதம் பாரு
தெள்ளப்பா பித்தமெல்லா மகன்று போகும்
தெளிவில்லா கிறுகிறுப்பு வாந்தி தீரும்
உள்ளப்பா அக்கினியா மந்தந் தீரும்
உஷ்ணமாங் காங்கை யெல்லாமகலும் பாரு
விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே
விதமாகப் புலிப்பாணி பாடி னேனே (341)

அரிதார பற்பம்

பாடினேன் அரிதார பற்பந் தன்னை
    பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்து கேளு
நாடினேன் அரிதாரக் கட்டி தன்னை
    நலமான கற்சுண்ணந் தனில் நீற்றி
தேடினேன் மேவியல கல்லுச் சுண்ணம்
    சேர்த்தரைப்பாய் சமன் கொண்டுமை யோலாட்டி
சூடினேன் கட்டியின் மேற்கவசங் கட்டி
    சுகமாக மஞ்சிலை வழக்கச் செய்யே (342)

செய்யப்பா குக்குடத்தில் நீறிப் போகும்
        செயமான பற்பத்தை யெடுத்துக் கொண்டு
வையப்பா சயங்கள் விஷபாகம் பாண்டு
        வளமான சுரங்களொடு பித்த ரோகம்
ஐயப்பா எலிகடியும் பயித்தியந் தீரும்
        கருவா(தா)ன பற்பமிது அறிந்துக் கொள்கு
நீயப்பா போகருட கடாட்சத் தாலே
        நிச்சயமாய் வயித்தியத்தைச் செய்து பாரே (343)

பித்தபயித்தியத்துக்கு பற்பம்

பாடிவேல் நாய்மண்டை மாட்டு மண்டை
        பாங்கான மனுஷருட மண்டை யோடு
நாடியே சரியெடையாய் கல்வத் திட்டு
        நலமான கழுதைப்பால் தன்னா லாட்டி
ஆடியே மைபோல வழித் தெடுத்து
        அடவாக வில்லை தட்டியுலரப் போட்டு
தேடியே குக்குடத்தில் புடத்தைப் போடு
        தெளிவாக பற்பமது தவள மாச்சே (346)

ஆச்சப்பா கழுதைப்பால் அட்டெடைத்தான் ரண்டு
அடவான இஞ்சிசாற் அட்டெடைதான் விட்டு
வாச்சப்பா சர்க்கரை அட்டெடைதான் போட்டு
வளமான பற்பமது கழஞ்சி கூட்டி
யேச்சப்பா கொடுத்துவிடு ஈராறு வேளை
யெழுந்தபித்த பரித்திரமும் பிரமை யேவல்
போச்சப்பா தேவதைகளிற் நற்கோ வீடு
புதைபில்லி வைப்புமுதல் தீருந் தானே (347)

தானென்ற கழுதையுட இட பாகத்தில்
    தாங்வளர்ந்த சடையுடனே பாம்பு சட்டை
மானென்ற வேப்பெண்ணெய் செஞ்சிலை சுத்தி
    மைந்தனே சுடரென்ற தயிலம் வாங்கி
கோவென்ற வூளிருக்கு கரண்டி வீதம்
    கொடுத்திடுவாய் மூன்று நாளாறு வேளை
தேனென்ற மேலுக்கும் பூசு பூசு
    தெளிவாகும் பில்லி பயித்தியந் தானாளாரே (348)

<u>சகல ரோகத்துக்கும் சித்திர மூலஎண்ணெய்</u>

ஆறாத குட்டுக்கு எண்ணெய் சொல்வேன்
    அடவாக எள்ளெண்ணெ யாவி ணெய்யும்
கூறாத வகைக்குவகை படிதாங் பாதி
    கொடிதாவ சித்தருட மூலப் பட்டை
நேராத பலமொழிது நீர் விட்டாட்டி
    நேராக எண்ணெயிலே கலக்கிப் போட்டு
மீறாத மெழுகு பதத்தனி லிறக்கி
    மிஞ்சாமல் தட்டெடைதான் கொண்டு பாரே (349)

பாரேநீ நாற்பதுநாள் கொண்ட போது
பாங்கான சூடெங்கே மேக மெங்கே
வீரநீ விப்புருதி கண்ட மாலை
விதமான பன்புரைகள் சிரங்குந் தீரும்
தீரநீ வாயுவொடு சூலைக் குத்து
திடமான செங்கிரந்தி தடிப்பு மாறும்
சேரேநீ பத்தியந் தானிதற்கோ இல்லை
செயலான போகருட கடாட்சந் தானே (350)

காணேநீ வசம்பு வேப்பரிசி யோடு
கனிவான சாம்பிராணி வகை வகைக்கு
தானேநீ விராகனெடை நிறுத்துக் கொண்டு
தயவாகச் சரக்கெல்லா மொன்றாய்க் கட்டி
பானேநீ யத்திரிப்பால் வெள்ளாட்டு நீரும்
பாங்காகப் பிசரிவைத்து உலர்த்திக் கொண்டு
மானேநீ பொடித்துப் பேய்ச்சுரைக் குடுக்கை
மைந்தனே ஞா எடைத்து வைத்துக் கொள்ளே (353)

கொள்ளவே பனவெடை தாளாசிக் கேற்ற
        கொற்றவனே சன்னிய நவிலகும் பாரு
அள்ளவே காகிதத்தில் வைத்துச் சுற்றி
        அடவாக நிம்பென் னெய்தனில் நனைத்து
மெள்ளவே பொருத்தியதை யாற்றிப் போட்டு
        மேன்மையாம்ப் புகையதனை நாசிக் கேற்று
தள்ளவே சிரசிலுள்ள வியாதி தீரும்
        தலைவலியு மொருதலையு மிடிப்பு போமே (354)

போமேநீ சீர்ப்பாச்சல் சயமும் பித்தம்
        பொல்லாத கபாலத்தில் சூலை வாயு
ஆமேநீ நசமுஞ்ச சகல தோஷம்
        அடவான மண்டைகுத்து கெர்ப்ப நோயும்
தாமேநீ சிரசிலுள்ள வியாதிக் கெல்லாம்
        தாக்கடா இப்புகையைச் சன்னுஞ் சன்னும்
வாமேநீ யின்மொரு சூட்சஞ் சொல்வேன்
        மாராத ரணங்களுக்கு வழுத்து தேனே (355)

இரணங்களுக்கு பூசை

வழுத்துரேன் கண்டத்தின் மேலே யுள்ள
        வாயுமுதல் கண்செவியின் நோயுந் தீரும்
பழுத்துரேன் பற்கிட்டு சன்னி தோஷம்
        பாங்கான முனிகருப் பெறுவா னாலும்
கொழுத்துரேன் பனவெடை ஆக்கிரானத் தோடே
        குணமான நவாச்சார நேரே சேர்த்து
சுழுத்துரேன் கற்சுண்ணங் கொஞ்சம் கட்டி
        சுருக்கமாக மத்தித்து நாசிக் கேற்றே (356)

எந்தேநீ ஆக்கிராணம் களஞ்சி யொன்று
இதமான அரிதாரம் லிங்கம் பூரம்
பார்த்தேநீ கொடிக்கள்ளி பட்டை நாகும்
பாங்கான கழுதைலத்தி பொடியு மப்பா
போற்றேநீ வகைவகைக்கு களஞ்சி யொன்று
பொங்கமுடன் திருகுகள்ளி பாலா லாட்டி
சேர்த்தே நீயுலர வைத்தெடுத்துக் கொண்டு
செயமான புங்குபுளி தன்னிற் கேளே (357)

கேளேநீ தணலிலே பொடியே போட்டு
கெடியான புண்களிலே புகைதான் சார
சூளேதான் வெடிசூலை மேக வெட்டை
சுடுகிரந்தி யரையாப்பு பௌத்தி ரங்கள்
கோளேதான் இப்புகையில் தீரும் பாரு
கொற்றவனே பொடியெடுத்து அலரிப் பாலில்
நாளேதான் மத்தித்து ரணத்தில் போட
நாயகனே இரணங்களெல்லாந் தீருந் தானே (358)

குட்டுக்கு_முழுகதாமரை_தயிலம்

தானான எள்ளன்னெழி படிதா னொன்று
    தகைமை குளிர்தாமரைச் சார்படிதா னொன்று
பானான பதந்தனிலே காய்ச்சி யப்பா
    பக்குவமாய்க் கிழிக்கித் தானே வைத்து
மானான பூலாங்கிழங்கு பச்சிலையு மப்பா
ஓஒஒ வகைவகைக்கு விராகனைந்து நிறுத்தக் கொண்டு
தேனாகப் பொடிபண்ணி தூவிப் போடு
    தெளிவாக வடித்திடுத்து முழுகு வாயே (359)

முருகயிலெ குடெல்லாந் தளர்ந்து போகும்
        முகிலையா சன்னொழிவு குளிர்ச்சி யாகும்
பமுகாது திரகமது பொச்சேபாதி மீளும்
        பண்பான நீர்கடுப்பு வினையுந் தீரும்
அமுகாது விந்துவந்கே இரு(க்கும் பாரு
        அடவாக மூலத்தீர் சூடும் போகும்
நமுகாது குலையூட கரணை வாங்கும்
        நலமான போகருட கடாட்சந் தானே (360)

<u>வயித்திய முப்பு</u>

தானான வயித்திய முப்பு மார்க்கம்
        தயவாகச் சொல்லுகிறேன் தரும மாக
கோனான பங்குனி சித்திரையில் பூநீர்
        கொற்றவனே மண்படா தெடுத்துவ்' வந்து
மானான நாலுபடி பாண்டத் திட்டு
        மைந்தனே கடலுப்பு படிதானி ரண்டு
வானான கற்சுண்ணம் படிதானி ரண்டு
        வளமான அமுரியது படிதா னெட்டே (361)

எட்டதுதான் வார்த்தபிறபூ எள்ளளவ் வையப்பா
　　இதமாக படியரைதான் அரைத்து வாரு
தொட்டதுதான் கலக்கியதை தெளி விறுத்து
　　தோணவே உப்பா குமட்டுஞ் காய்ச்சி
விட்டதுதான் அரைபடி வெட்டே விட்டு
　　விதமாக இவ்விதமாய்ப் பத்துமுறை காச்சு
பட்டதுதான் குழம்பது போலாகும் பாரு
　　பாங்கான எருச்சாம்பல் சொல்லக் கேளே (362)

கேளேதான் எருச்சாம்பல் பரப்பி மைந்தா
    கெனிதமுடன் சல்லாவை விரித்துப் போட்டு
நாளேதான் இதில்வாறு இருகும் போது
    நலமாக வுன்டைய தாயுருட்டிப் போடு
சூளேதான் ரவியில்வைத்து எடுத்துக் கொண்டு
    சுகமாக நெற்பிசரி ஒரு பாண்டத்தில்
வாளேதான் ளைரப்பாண்ட மதனில் விட்டு
    வளமாக வதன்மேல் மல்லிகை யிலையே (363)

மல்லிகை யிலைபரப்பி யிந்த வுண்டை
    மைந்தனே மேல்வைத்து இலையால்மூடி
அல்லியே யதின்மேலே நெல்லிட் டப்பா
    அடவாக சட்டிகொண்டு மூடி யெரி
வல்லியே நெல்லுவெந்த பின்னெடுத்து வைத்து
    வளமாக சிப்பி நா றிரச்சி யொக்க
கல்லியே துவாரமிட்டுச் சொல்லக் கேளு
    கருத்தாக வீரம்பச்சை பூரந் தானே (364)

தானான பூரமுடன் பூநீ ரப்பா
    தயவாக வகைவகைக்கு விராகன் மூன்று
கோனான இவைநாலும் பொடியாய்ச் செய்து
    கொற்றவனே சிப்பியுட துவாரந் தன்னில்
மானான சிப்பிதொறுங் கொஞ்சம் போட்டு
    மைந்தனே சட்டியின் மேல்பரப்பி வைத்து
பானான செயநீரும் இறங்கும் பாரு
    பாங்காக இதையெடுத்து பதனம் பண்ணே (365)

பண்ணப்பா நாதவிந்து ரண்டு காணும்
    பண்பான இளநீருஞ் சமனாய்ச் சேர்த்து
நண்ணப்பா பாகுவண்டு உரமுஞ் சூதம்
    நலமாக கருநாபி பச்சை பூரம்
உண்ணப்பா ஆறுபுள்ளி வசிறுள் முட்டை
    உத்தமனே சீனமுடன் சார மப்பா
வண்ணப்பா வகைவகைக்கு பாகிலை தாகி வீதம்
    வகையாகப் பொடியதனி இளநீரிற் போடே (366)

போடேதான் தெளிவிறுத்தி குன்டை தன்னை
    பொக்கமுடன் இளநீரால் சாம்பி மாட்டி
ஆடேதான் வில்லைதட்டி ரவியில் போட்டு
    அடவாக காயிந்தபிறகு சொல்லக் கேளு
நாடேதான் பேரண்டம் பொடிய தாக்கி
    நலமான ஓட்டின்மேல் பரப்பி வைத்து
கூடேதான் அதன்மேலே வில்லை வைத்து
    குணமாக அதன்மேலே பொடியைப் போடே (367)

போடப்பா மேல்மூடிச் சேலை செய்து
புனிதமுடன் பத்தெருவில் புடத்தைப் போடு
காடப்பா இம்முறையாய் ஐந்து போடு
கசடறவே சுண்ணமா யிருக்கும் பாரு
பாடப்பா பேரண்டஞ் சிற்றண்டத் தோடு
பாங்கான சிப்பியு நண்டோடு நத்தை
மாடப்பா இவையெல்லாம் வெவ் வேறாக
மைந்தனே சிற்றண்டக் கருவா லாட்டே (368)

ஆட்டியே உலரவைத்து உலை யிலா த
அப்பவே அஞ்சுந்தான் சுண்ண மாகும்
நாட்டியே அஞ்சுண்ணஞ் சமனாய்க் கூட்டி
நலமாக முன்விட்ட செயநீர் விட்டு
கட்டியே தானரைத்துக் குகை பிடித்து
குணமாக சில்லுசெய்து முன் சுண்ணத்தை
வாட்டியே செயநீரால் மைலோ லாட்டி
வளமாகத்தான் ரவியி லுலரப் போடே (369)

போடேநீ அஞ்சுகல்லைக் குகையில் வைத்து
        போதகமாய் யஞ்சுகல்லைஞ் சில்லும் போட்டு
அடேநீ சுண்ணாம்புச் சீலை செய்து
        அடவாகப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
நாடேநீ அச்சு தரமிந்தப் பாகம்
        நலமாகப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
மாடேநீ நாதாக்கள் சாபந் தீர
        மைந்தனே ஆத்தாளைப் பூசை பண்ணே (370)

பன்னவே சுன்னத்தால் சுன்ன மாகும்
பாங்கான செந்தூரம் மெழுகு மாகும்
நன்னவே கட்டின முழுக்கின முமாகும்
நலமான சரக்கெல்லாம் பற்ப மாகும்
உன்னவே லேகியங்கள் கிருதம் என்னெய்
உத்தமனே யகிழ்தமென்ற வகைகட் கெல்லாம்
என்னவே பனவிடைதான் கூட்ட வேண்டும்
இல்லா விட்டால விந்தமது வீரில்லாதே (371)

<u>நோய்க்குச்சாந்தி</u>

இல்லாத நோய்கள்தான் சடத்தில் மேவும்
ஏதென்றால் பஞ்ச பாதகத்தால் காணும்
பொல்லாத கர்மவினை தீர வேண்டி
பூட்டுகிறேன் சாந்தியொன்று சொல்லக் கேளு
வல்லான ஓடுநீர் கலசந் தன்னில்
வளமாகக் கொண்டுவந்து தர்ப்பை போட்டு
செல்லான கலசத்தை மேலே வைத்து
செயலான அக்குமணி சேர்த்துக் கட்டே (372)

பஞ்சபாதகந்தீர சாந்தி ஓமம்

கட்டப்பா மாவிலையை மேலே வைத்து
கலவான மஞ்சளைத் தானவிரத்து வப்பி
பட்டான முக்கோண கலசத் துள்ளே
பாங்காகத் தானிட்டுச் சிகாரம் நாட்டி
மட்டான நோயாளி தன்னைத் தானு
மன்னவனே முன்னைவைப்பாய் மதியந் தன்னில்
வட்டப்பா தூபமொடு தீபங் காட்டி
வளமான வில்வமீது நூற்றெட் டாமே (373)

ஆமப்பா ஓமமொன்று அர்ச்சனையுஞ் செய்து
அடவாக கலசநீர் சிரசில் வார்த்து
தாமப்பா ஒருசிரங்கை யுள்ருக் கீந்து
தயவாக வில்வமது மூன்றுநாள் கொண்டால்
ஓமப்பா அருக்கன் முதல்சனி நாள்மட்டும்
ஒடுக்கமா யிப்படியே செய்தா யானும்
போமப்பா பஞ்சபாத கங்களி யாவும்
பொல்லாத பிரமைபிணி யேவல் போமே (374)

நோய்க்கும் பேய்க்கும் ஓமசாந்தி

போமேதான் ஓமத்தில் சாந்தி கேளு
பொங்கமுட னைந்துபடி யரிசி கொட்டி
ஆமேதான் பச்சரிசி மேலே கேளு
அடவான திரிகோணம் விந்து போட்டு
தாமேதான் ரீங்கார முள்ளே போட்டு
தயவாக கும்பமைத்தில் தனிநூல் சுற்றி
வாமேதான் சலமது தானிறைய விட்டு
வளமான சொர்ணமொன்று கூடப் போடே (375)

போடப்பா இருபத் தைந்தரையு மாறி
        பொங்கமுடன் மாவிலையுந் தேங்காய் வைத்து
ஆடப்பா சந்தனத்தைக் கரைத்து சாத்தி
        அட்சதையுஞ் சுகந்த பரிமளங்கள் பூசி
நாடப்பா பட்டு வஸ்திரங்கள் சாற்றித்தி
        நலமான புட்பமதில் மர்ச்சனையே செய்து
ஈடப்பா பழந்தேங்காய் தாம் பூலங்கள்
        இதமான பலகார மின்நீர் பாலே (376)

பாலுடனே பாலக்கம் வஸ்த்ர வோடு
பரமானம் அவலுடனே சுத்தி அன்டம்
ஏலுடனே பொரிகடலை சர்க்கரை மாவிளக்கு
இதமான வெண்ணெய் பொங்கல் பசும்பருப்பு
சேலுடனே இத்தலையு மிலைதான் போட்டு
செப்பமுடன் பாம்மாரி தூபம் போடு
பாலுடவே ஓமகுண்டத் சமிதை சேரு
மைந்தனே மாவிலிங்கம் விளா த்தி யாமே (377)

ஆமேநீ வில்வமொடு எட்டி நொச்சி
இடவான மாவோடு ஓமம் நெய்யாம்
தாமேநீ ரம்அக்கினி நமாவெள்ளே தான்
தயவாக சமித்தக் காயிரத் தெட்டோதி
போமேநீ எள்ளு முந்தகடலை மொச்சை
பொலிவான துவரைபசும் பயற்றி னோடு
வாமே காராமணியும் அரிகோ தும்பை
வனமாக ஒன்பதையும் ஓமம் பண்ணே (378)

பண்ணப்பா தேன்பாலு வஸ்து சுத்தி
    பாங்கான பழந் தேங்காய்பல காரங்கள்
நண்ணப்பா இளநீர் சர்க்கரை பானக்கம்
    நலமான தயிர்சோறு நெத்பொரியுங் கூட
வண்ணப்பா அக்கினிக் காகுதியே பண்ண
    வஞ்சனையு முறைப்பாடுந் தேவர் குற்றம்
ஒண்ணப்பா அசுத்த சுத்தகளமும் பூதம்
    உத்தமனே பஞ்ச பாதகமும் போமே (379)

போமடா பில்லி வஞ்சனையும் ஏவல்
ஆமடா பிரமைபூதம் வியாதிமுதல் பூசாசு பேயும்
அடவான பேச்சிகுழ் கந்தருவர் மூர்த்தி
தாமடா சாத்தனொடு இருள னையத்
தயவில்லா சப்பாணி இருதலையின் கொள்ளி
ஓமடா இவ்வம் வெகுபசா சாவாலும்
ஓமத்தில் கண்டு விடுங்கண்டு பாரே (380)

கண்டு கும்பமைந்துந் தீப ஞாபம்
கனிவாகத்தான் கொடுத்து சோடசமுஞ் செய்து
பண்டு முன்னே நோயாளிதனக்கு மப்பா
பாங்காகக் கலசநீர் சிரசில் வார்த்து
கொண்டுவல்லோ அவிழ்தங்கள் கொடுக்கச் செய்நீ
குற்றமெல்லாந்தான் தீர்ந்து வியாதி போகும்
தொண்டு செய்வாதனவோரும் சமர்த்த னென்று
தொல்லுலகில் செல்வமதாய் வாழ்வார் தானே (381)

கழிப்பு செய்யும் விதம்

தானென்ற கழிப்புக்குச் சொல்லக் கேளு
        தயவாகப் பச்சைமாப் பாவை செய்து
வானென்ற புறமுறத்துக் குள்ளே வைத்து
        வளமாக ஆபரணந்தன் தன்னைப் போட்டு
கோனென்ற முப்பத்தி ரண்டு தீபம்
        குறையாமல் நவரத்னஞ் சொர்ணம் வைத்து
வானென்ற வஸ்திரங்கள் பரிமளங்கள் சாத்தி
        மைந்தனே சுகந்தபுஷ்பம் வாடை தாவே (382)

<u>இரத்தசாமுண்டிசக்கரம்</u>

ஞாவடா ரத்த சாமுண்டி சக்கரம்
துலங்கவே பாவைமுன்னே ஷ்கோனம் போட்டு
மாவடா தாலெடுத்து ரேகை போட்டு
மைந்தனே எட்டரையில் காியே ஞாவு
நாவடா நாலரையிற் யிரட் கோணத்தில்
நலமான திருச்சூரணந் தன்னைத் ஞாவு
வாவடா உட்சதுரம் மஞ்சள் ஞாவு
வளமான முக்கோணம் பச்சை யாமே (383)

ஆமேதான் முக்கோணம் ஸ்ரீங்காரம் போட்டு
அடவான நாலரையில் அம். ஓம். தம்மெமத்ரு
தாமேதான் நாலரையில் ஓங்காரங் கட்டி
தலைசுழித்து சூலமிட்டு தயவ தாக
வாமேதான் கருப்புவன்ன அனாக வெட்டு
வளமாக அ. ஆ. இ. ஈ. உ. ஊ. எ. ஏ—என்ன
போமேதான் எட்டு முனைசூலம் போடு
பொங்கமுடன் களபமுதல் சுகந்தஞ் சாத்தே (384)

சாத்தப்பா எட்டுமுனைச் சக்கரத்தில் முன்று
சார்வான பழந்தேங்காய் தாம் பூலங்கள்
மாத்தப்பா பலகார வகையு மன்னம்
வஸ்துசுத்தி கடலைபொரி வண்டத் தோடு
போத்தப்பா இளநீர் தேன்பா லக்கம்பால்
பொங்கமுடன் மஞ்சள் நீர்கனி தண்ணீரு
ஏத்தப்பா கடலைமொச்சை பயறு சுண்டல்
இதமாக வெண்ணெயுஞ் சர்க்கரையும் வையே (385)

வையப்பா பச்சை மாவிளக்கி னோடு
வளமாக இத்தனையும் முன்னே வைத்து
கையப்பா புருப்பானை வாயைத் தட்டி
கனிவாக சுண்ணாம்பை மேலே பூசி
பையப்பா கரிபொட்டு மேலே குத்தி
பாங்காக புழுங்கரிசி சோற்றைப் போட்டு
மையப்பா உழுந்தெள்ற பருப்புங் கூட
மைந்தனே கத்திரிக்காய் கருவா டாமே (386)

ஆமேநீ முருங்கக்காய் மொச்சைச் சாறு
அடவான கீரைக்கு கீரை யோடு
வாமேநீ வஸ்துவுடன் சுத்தி கூட
வளமான பஞ்சவன்னச் சோறும் வைத்து
தாமேநீ பழந்தேங்காய் தாம்பூலஞ் சுத்தி
தயவாக ஒட்டிலிட்டு பாவை முன்பு
போமேநீ யெட்டி மாவிலிங்கம் ரண்டும்
பொங்கமுட நிம்பனின்னெயி முளகா யாமே (387)

ஆமப்பா சொர்ண புஷ்பமவர்க்கு வைத்து
அடவான தீபமொடு தூபங் காட்டி
தாமப்பா சோடசோப சாரஞ் செய்து
நயவான நைவேத்திய மான பின்பு
வாமப்பா பாவையைத் தான்தலையைச் சுற்றி
வளமாக ஒட்டையுந்தான் தலையைச் சுற்றி
போமப்பா காடுதனில் மயானந் தன்னில்
பொங்கமுடன் முப்பலியுங் கொடுத்து வையே (388)

வைத்தவுடன் பில்லி சூனியங்கள் யேவல்
வலுவான பேய்பூதம் கறுப்பு மாடன்
இத்தமுடன் முனீசுரன் இருளி காட்டேரி
இதமான மலுக்குடனே சின்ன பீரும்
பத்தவுடன் பிரம ராட்சதையும் பேயும்
பாங்கான சாத்தனொடு மொட்டாக் பின்னும்
கத்தவுடனி குதலையின் கொள்ளி யோடு
கருமுறையுந் தேவதை களோடிப் போமே (389)

<u>சிதம்பரமெழுதிக்கட்ட</u>

போமேநீ சிதம்பரத்தை யெழுதிக் கட்ட
போகுமடா நோய்பிணியும் பஞ்ச பாவம்
ஆமேநீ பிராமணர்க்கு அன்னம் போடு
அபிஷேகம் சங்கரார்க்குத் தீபம் ஏற்ற
தாமேநீ மயேஸ்பரற்கு பூசை செய்நீ
தயவுடனே நந்திக்கு சலத்தை வாரு
வாமேநீ அரசுடனே வேம்பு சுற்றி
வயிரவர்க்கு வடமாலை சாத்த நன்றே (390)

வைத்தவுடன் பில்லி சூனியங்கள் யேவல்
    வலுவான பேய்பூதங் கருப்பு மாடன்
இத்தமுடன் முனிவீரன் இருளி காட்டேரி
    இதமான மலுக்குடனே சின்ன பீரும்
பத்தவுடன் பிரம ராட்சதையும் பேயும்
    பாங்கான சாத்தனொடு மொட்டாள் பிள்ளும்
கத்தவுட விருதலையின் கொள்ளே யோடு
    கருமுறையுந் தேவதை களோடிப் போமே (389)

சிதம்பரமெழுதிக்கட்டு

போமேநீ சிதம்பரத்தை யெழுதிக் கட்டு
      போகுமடா நோய்பிணியும் பஞ்ச பாவம்
ஆமேநீ பிராமணர்க்கு அன்னம் போடு
      அபிஷேகம் சங்கரர்க்குத் தீபம் ஏற்று
தாமேநீ மயேஸ்பரற்கு பூசை செய்நீ
      தயவுடனே நந்திக்கு சலத்தை வாரு
வாமேநீ அரசுடனே வேம்பு சுற்றி
      வயிரவர்க்கு வடமாலை சாத்த நன்றே (390)

பில்லிவஞ்சனை நோயுந்தீர்ப்பதற்கு கிரியை

நன்றான பில்லி வஞ்சனையும் நோயும்
      நாயகனே தீர்ப்பதற்குச் சொல்லக் கேளு
குன்றாக மாவிலிங்கன் குப்பை மேனி
      குணமாக முடக்கற்றான் இதநால் மூன்று
பண்டாக வகைவகைக்கு பலம் பத்தாக
      பாண்டத்தி லதனைவிட்டு துளி நீரில்
தண்டாக வேகவைத்து விரல் பொறுக்க
      தம்பைமலர் மேலிடவே பிணிகள் போமே (391)

வேறுதண்ணீர்

போமேநீ பூவரசு ஆவின் பட்டை
　　பொங்கமுடன் கடப்பன்பட்டை முக்கூ மாக
ஆமேநீ வகைவகைக்கு பலந்தான் பத்து
　　அடவாக ஊனீர் தண்ணீர் காய்ச்சி
தாமேநீ மேலிடவே பிணிநோய் தீரும்
　　தயவான பில்லி வஞ்சினையுந் தீரும்
போமேநீ அருகம்புல் சம்பு கோரை
　　புகழ் பெறவேமுய் போலேபிணிகள் போமே (392)

ஏவல்தீர்க்க

போமடா கண்டங் கத்திரியின் மூலம்
    பொங்கமுடன் காட்டுச் சீரகத்தின் மூலம்
வாமடா பிரமராச்ச தையின் மூலம்
    வகைவகைக்கு பலம்ஞான நிறுத்துக் கொண்டு
தாமடா வெவ்வேறு பாண்டத் திட்டு
    தயவான ஞானிநீர் தன்னை வார்த்து
நாமடா வெந்திறக்கி தின மொன்றாக
    நலமாகத் தாள்வார்க்க ஏவல் போமே (393)

இரத்தசாமுண்டிமந்திரம்

போமப்பா ரத்தசா முண்டி மந்திரம்
    பொங்கமுடன் முன்னாகச் சொல்ல வில்லை
ஆமப்பா ஓம்ரீயும் ரத்தசாமுண்டி அருதரு
    மடிமடி சித்திரு குளுசுவ காவென்று
    அடவாக சக்கரத்தி லாயிரந் தானோது
நாமப்பா பில்லி வஞ்சனையும் நோயும்
    நலமான தேவரொடு கணங்கள் பூதம்
வாமப்பா பஞ்ச பாதகங்கள் யாவும்
    வளவான ராட்சதையும் விலகுந் தானே (394)

ஆடாதபேய் ஆட

தானென்ற பேய்மிரட்டி யிலையின் னாரும்
தலைப்பிள்ளை கொடினாரும் சமனாய்ச் சேர்த்து
பானென்ற இவையுடன் சாம்பிராணி சேர்த்த
பாங்காகப் புகைப்போட பசாசு ஆடும்
கோவென்ற ஓவாவா வென்று ஓத
கொற்றவனே பூதமெல்லா மாடும் பாரு
தேனென்ற போகருட கடாட்சத் தாலே
தெளிவாகப் புலிப்பாணி பாடி னேனே (395)

கணங்கள் பில்லிவஞ்சனை போகதீபம்

பாடினேக் மேனிருவர் முட்டை யோடு
பாங்கான கழுதையுட தர்டும் கட்டி
நாடினேன் கருச்சீலை தனில் சுருட்டி
நற்கழுதை நெய்யாதல் வேப்பெண் ணெயாதல்
கூடினேன் சிரசோடு கிளிஞ்சி யாதல்
குணமாக தீபமிட்டு பார்க்கும் போது
ஓடினே னென்றுசொல்லிக் கணங்கள் யாவும்
உத்தமனே பில்லி வஞ்சனையும் போமே (396)

பயித்தியத்திற்கு

போமடா கோசலமும் பசுவின் பாலும்
பொங்கமுடன் கரிப்பான்சாரி முசு முசுக்கை
தாமடா வகைவகைக்கு படிதா னொன்று
தயவான எள்ளெண்ணெய் படிதா னொன்று
ஆமடா கடுகுபதந் தன்னிற் காய்ச்சி
அடவாக மூர்ச்சிவர பிரமை பித்தம்
சாமடா பயித்தியஞ் செய்வினையுந் தீரும்
சற்குருவாம் போகருட கடாட்சந் தானே (397)

சகலபேயிக்குங் குளிசம்

தானப்பா பிரம ராட்சதையும் பூடு
தயவாக வெள்ளிநாவி காப்புக் கட்டி
வானப்பா பஞ்சவன்ன நூலி னாலே
வளமாகத் தான் கட்டிசோ சலத்தை வாரு
மானப்பா எட்டு நாளந்தி சந்தி
மைந்தனே வார்க்கையிலே தியான மோது
ஆனப்பா அரிபிரம ராட்சதை நீயென்று
ஆநந்தவல்லி யென்று நூற்றெட் டோதே (398)

ஓதடா முப்பலியும் பொங்க லிட்டு
    உத்தமனே நடுச்சாமந் தன்னில் தானும்
வாதடா நிருவான ரூபம் கொண்டு
    வன்மையுடன் ஆணி வேரறாமல் நீயும்
ஆதடா யெடுத்துவந்து குளிசங் கட்ட
    ஆடவான பிரம ராட்சதை பூமேவல்
நாதடா முனிகருப்பு பேயும் பூதம்
    நலமான தேவனொடு ஓடிப் போமே (399)

பேய்பூதம்ஓடிப் போகமை

போமடா இன்னமொரு மையைக் கேளு
    பொங்கமுடன் பன்றியுட மூஞ்சி யொன்று
ஆமடா நாய்ப்பல்லு புலியின் னாக்கு
    அடர்கழுதை மன்டை கரும்பூனை யீரல்
வாமடா மனுசர் மலந்தீட்டுச் சீலை
    வளமாக நொருக்கிப் பாபாண்டத் திட்டு
தாமடா குளித்தயில மாவாரைக் காஷ்டத்
    தாலெரித்து குப்பியிலே அடைத்துக் கொள்ளே (400)

கொள்ளப்பா மயானத்தில் பாழ் வீடாதல்
கோரிவிடு குட்டிச் சுவர் தனிலாதல்
வள்ளப்பா வஸ்துடனே நெற்பொரியும் வைத்து
வளமில்லா எருக்கம்பூ அரும் பினாலே
மெள்ளப்பா நாற்றெட்டு உருத்தா னோது
மேன்மையாம் அக்காளைத் தியானித் தநீ
அள்ளப்பா நாம்நாம் நாசிநா சி, சீசீ, போபோவென்று
அடைவாகத் தயிலத்தி னருமை பாரே (401)

பாரேநீ திலர்த மிடப்பிலி வஞ்சனை
பறக்குமடா தேவரொடு கணங்கள் பூதம்
நேரேநீ முனிகருப்பு பேய் பசாசு
நேரில்லா செய்வினையும் பயித்தியந் தீரும்
சீரேநீ நெரிகெட்டால் வாசல் மேலே
செயலாகப் போட்டிட சொர்ப்பனங்கள் கோடி
வேரேநீ வெடியுடுக்கில் நடவினாக் கால்
வீரான குறிமுகந்தான் சொல்ல நன்றே (402)

சொல்லான வெடிப்பிருந்த பொட்டி னாலே
சொர்பெரிய சொர்ப்பனங்கள் தீர வேலிடில்
அல்லான பொட்டைமிகச் சுரண்டி யப்பா
அடவாக முறைந்தனிலே சிந்தாமல் தான்
வல்லான சாணியிட்டு மெழுகி நன்றாய்
வளமாகப் பசுவின்பால் கொண்டு தேய்நீ
சொல்லான வல்லான் கால்படா நிலத்தில்
சூரையாய்க் கொட்டிவிடு சொர்ப்பனங்கள் போமே (403)

அக்கினி பிராஸ்திரி

போமென்று அக்கினி பிராஸ்திரியைக் கேளு
     பொங்கமுடன் மெழுகதனும் வீராகன் ஒன்று பத்து
ஆமென்று பாண்டத்தி லிட்டு மைந்தா
     அடவாக வீரமைத்து பொடித்துப் போடு
தாமென்று உருகையிலே விளக்கெண்ணெய் விட்டு
     தானுருக்கி வடிகட்டி சலத்தில் வாரு
வாமென்று தனையெடுத்து சிமிழில் வைத்து
     வளமாகச் சல்லாமேல் தடவி வையே (404)

தடவியே கைகால் குத்தெடுக்குந் தேகம்
தயவான எலுமிச்சம் பழச்சார் பூசி
அடவியே சாரத்தைப் பொடித்துத் தூவி
அடவான பிளாஸ்திரியை அளவாய்ப் போட்டு
மடவியே கட்டிடவே பொறுக் கொண்ணாது
மயக்கமுஞ் சோபங்கண்டா லவிழ்த்துப் போடு
கடவியே கொப்பளித்து சலம தாகும்
கத்தரித்து விட்டுவிடு நீரு போமே (405)

இரணமாறுகிற பிளாஸ்திரி

போமேநீ வலிக்குத்து தீர்ந்து போகும்
பொங்கமுடன் ரணமாரப் பிளாஸ்திரி சொல்வேன்
ஆமேநீ வெள்ளையெலிற குங்கிலியந் தன்னை
அடவான மெழுகுடனே சமனாய்ச் சேர்த்து
வாமேநீ பாண்டத்தி லுருகும் போது
வளமான தேங்காயின் நெய்யை வார்த்து
நாமேநீ யுருக்கி வடிகட்டி நீரில்
நலமாகத்தான் வார்த்துள் எடுத்துக் கொள்ளே (406)

கொள்ளப்பா சிமிழில் வைத்துப் பதனமாக
        கொத்தவனே சல்லா வஸ்திரத்தில் பூசி
அள்ளப்பா அனல்தனிலே காட்டி கட்ட
        அடவில்லா ரணங்களெல்லா மாறிப் போகும்
மெள்ளப்பா சிரங்குபுண்ணில் பிராக்திரி போட
        மேன்மையா யொடுங்கியது உதிர்ந்து போகும்
தெள்ளப்பா போகருட கடாட்சத் தாலே
        தெளிவாகப் புலிப்பாணி பாடி னேனே (407)

__பிளாஸ்திரி__

பாடுகிறே னின்னமொரு பிளாஸ்திரி கேளு
பாங்கான விளாம்பிசினுங் கருங்குங்கி லியம்
நாடுகிறேன் சமன்கொண்டு உருகும் போது
நலமான விளக்கெண்ணெய் கூட விட்டு
ஆடுகிறேன் வடிகட்டிக் கலசந் தன்னில்
அடவாகத் தாளடைத்துத் துணியில் பூசி
ஓடுகிறேன் ரணங்கள்மேல் போட ஆறும்
சுகமாக அனல்காட்டிப் போட்டி டாயே (408)

போட்டிடவே இன்னமொரு பிளாஸ்திரி சொல்வேன்
புகழ்பெரிய மரத்து வெள்ளைபலந்தா னைந்து
கட்டிடுவாய் பூரவெடை விராக னைந்து
கட்டியே தானரைந்தப் பொடியாய்ச் செய்து
மாட்டிடுவாய் தென்னங் காயெண்ணெ யாலே
மைந்தனே தானரைத்து தண்ணீர் விட்டு
ஆட்டிடுவாய் தவளம் போலாகு மட்டும்
அப்பனே புண்மேலே போடப் போமே (409)

மேகராசாங்கத்தென்னெய்

போமென்ற மேகராசாங்கத் தென்னெய்
பூட்டுகிற வன்றாகப் புகலக் கேளு
ஏமென்ற எரண்டத் தென்னெய் படிநாலு
யிதமாக ஈருள்ளிச் சாறுபடி ரண்டு
ஆமென்ற கழுதைலத்திச் சாறுபடி ரண்டு
அடவாக வரிக்குமட்டிச் சாறுபடி ரண்டு
வாமென்ற கையான் புளியாரை சங்கு
ஏவல்லாரைப் பிரமி பொடுதலை செருப்படியே (410)

படியான கருநொச்சி பொன்னாங் காணி
        பாரிலுள்ள ஆதொண்டைக் கிரந்தி பூண்டு
செடியான வெள்ளறுகு சிவனார் வேம்பு
        செயலான வகைக்குவகை படிதான் ரண்டு
கொடியான சாறெல்லா மெட்டுடான் நாக்கி
        கெடிதமாய் வேருவகை சொல்லக் கேளு
படியான கொடிவேலி பூவரசன் வேரும்
        பொங்கு நிலவாகை சுடுரத்தம் வேரே (411)

வேரான கிளுக்கின் கிளங்கி னோடு
        விதமான அப்பையுட கிழங்குங் குப்பி
சீரான வகைவகைக்கும் பலம தாகச்
        சேர்த்திடித்துக் குழனி நீரெட்டொல் நாக்கி
காரான எண்ணெயிலே விட்டு மைந்தா
        கடைமரக்கு இஞ்சிபோட எடுத்தாய்க் கேளு
பேரான சாதிக்காய் கிராம்பு ஏலம்
        பேதமில்லாச் சிறுலவங்கப் பட்டை மீதே (412)

மிளகுடனே அதிமதுரம் கோஷ்டம் திப்பிலி
மீதமான திப்பிலியின் மூலத் தோடு
அளகான வெங்காரங்கு ராசானி யோமம்
அடவான தான்றிக்காய் கடுக்காய் காயம்
களகான காயசிரகம் காரி போகம்
கஸ்தூரி அரத்தைக்கு அதிவிடையமதின் ராகாரம்
புளகான கடுகு ரோகணியு மாஞ்சில்
பொற்கமுடன் தாளிச பத்திரியு மாமே (413)

ஆமென்ற கசாகசா ஓமங் கஞ்சா
அடவான வலம்புரிக் காம்பரங்கிப் பட்டை
வாமென்ற சௌாமரப் பட்டை யோடு
வழமான வாலுளுவை சிறு நாகப்பூ
ஊமென்ற தக்கோலம் வசம்பு சுக்கு
உத்தமனே யபினி வசுவாசி சீரம்
போமென்ற யானைத்திப்பிலி குங்குமப் பூ
பொங்கமுடன் வாளஞ் சேங்கொட்டை தானே (414)

தாவென்ற எவச்சாரஞ் சத்திச் சாரம்
தயவான நவச்சாரஞ் சாஸ்திர பேதி
ஆமென்ற வகைவகைக்கு விராக நாலு
அடவாக பொடித்துநீ கிண்ணெய் தனிற்போட்டு
வாவென்ற மெழுகு பதந்தனி லிறக்கி
வன்மைபெறக் கணபதியைப் பூசை செய்து
தேவென்ற குருபதத்தை மனதி லுன்னி
தென்புபெற ஒருகரண்டி யுள்ளே கொள்ளே (415)

கொள்ளப்பா அந்திசந்தி கொண்ட போது
கொடிதான பத்தியந் தானெறவு மாகா
தெள்ளப்பா மூன்று நாளாது வேளை
தெளிவாக ஏழாநாள் நீரை வாரு
மெள்ளப்பா வருத்தஉப்பும் பருப்பு மாகும்
மேன்மையால் மற்றாநாள் புளியைச் கட்டு
சுள்ளப்பா கிரந்தி யரையாப்பு சூலை
சுகமில்லா விப்புருதி கண்டமாலை போமே (416)

போமேநீ யிருபத்தோர் மேக(முந் தானும்
    பொங்குகின்ற குஷ்டமொடு சோகை பாண்டு
தாமேதான் கழல்வாதம் அண்ட வாதம்
    தயவில்லா கால்வாதம் பச்சை வாதம்
ஆமேதான் பவுத்திரமு மூலப் புற்று
    அடவான மண்டை சூலை வாயு
தீமேநீ ரண்களொடு சூலை தீரும்
    திறமான போகருட கடாட்சந் தானே (417)

ஐந்தெண்ணெய் தயிலம்

தானான எள்ளெண்ணெய் யேரண்டத் திணெய்
    தயவான இலுப்பை நெய்வேம்பு நெய்தான்
மானான புங்குநெய் யைந்துந் தானும்
    மைந்தனே வகைவகைக்கு படிதா னொன்று
தானான பாண்டத்தி லளந்து விட்டு
    தயவாக கியாழவகை சொல்லக் கேளு
கோனான ஆதொண்டை மூலம் பத்திரி
    கொற்றவனே செம்புடைய மூலங் கேளே (418)

கேளேநீ நமுதாழை காட்டா மணக்கு
    கெணிதமாய்த் திருகுகள்ளி வேளை மேனி
நாளேநீ மாவிலிங்கம் ஆலி நொச்சி
    நலமான வேம்புபுங்கு வெள்ளை நொச்சி
சூளேதான் கொடிவேலி கார்முருங்கை சங்கு
    சுகமாக ஊர்முருங்கை தா து வேளை
வாளேநீ மாம்பட்டை மூலிகைதான் மூலம்
    வகைவகைக்கு பலமைந்த நிறுத்துக் கொள்ளே (419)

கொள்ளவே இவையெல்லா மிடித்துப் போட்டு
        குணமாக நாழிநீர் எட்டொன் றாக்கி
தெள்ளப்பா எண்ணெயி லேயிருந்து வாரு
        தெளிவாக சரக்குவகை சொல்லக் கேளு
மெள்ளப்பா அரத்தைசுக்கு ஓமந்திப் பிலி
        மேன்மையாய்த் திப்பிலியின் மூலத் தோடு
அள்ளப்பா ஆனை திப்பிலியும் காயம்
        அடவாக கருஞ்சீரகம் சதகுப்பை தானே (420)

தானென்ற தேசவரங்கு ராசாணி யுள்ளி
        தயவாக வெள்ச்சி யென்ற பிசினியோடு
வானென்ற வசம்புடனே தேக்கு இஞ்சி
        மைந்தனே சடாமாஞ்சில் கிராம்பு குக்கில்
தேனென்ற வகைவகைக்குப் பலந் காலாக
        தெளிவாக அரைத்திட்டு எண்ணெயிலே போட்டு
காவென்ற மெழுகு பதத்தன்னில் காய்ச்சி
        கணபதிக்கு பூசைசெய்து எடுத்துக் கொள்ளே (421)

கொள்ளப்பா தயிலங் காசிடை தானுண்டு
குணமாக மேலெங்கும் பூசினாக் கால்
கள்ளப்பா சன்னியெங்கே தோஷ மெங்கே
கடிதான வலிப்பேறும் அண்ட வாதம்
சொன்னப்பா வாதமெந்த வகைக ளெல்லாம்
சுழன்றெழுந்து ஓடிவிடு மெதில் நில்லாது
மெள்ளப்பா மூன்று நாளாது வேளை
மேன்மையா யேழாநாள் நீரை வாரே (422)

விஷமுஷ்டித்தயிலம்

வாரேதான் விஷமுஷ்டி தயில மொன்று
      வளமாகச் சொல்லுகிறே னின்றாயக் கேளு
சேரேதான் யேரழிஞ்சி யெட்டி சங்கு
      செயலான வன்னிபுங்கு வண்டு கொல்லி
சாரேதான் சங்கன் குப்பிகடம்பு சின்னி
      சார்வான வெள்ளறுகு ஆவிப் பட்டை
[illegible]
தீரேநான் மருக்காரை இண்டுக் கொத்தான்
      திறந் சென்னாயுருவி காஞ்சோரி யாமே (423)

ஆமேதான் குன்றிமணி கருத்த கன்னி
      ஆவாரை சிவன்வேம்பு கமுதை முன்னி
தாமேதான் மருதோன்றி புரசுகரு ங்காலி
      தயவான புடாத்தி யொடுகிருவை வாகை
போமேதான் புவலின்டு கருகு மத்தை
      பொங்கமுடன் கொடுவேலி முத்தக் காசு
வாமேதான் அமுக்கரா விடத் தேறும்பூ
      வரசுடனே சின்னபலா குமாரி தானே (434)

தானான ஸ்ரீகரணை கொன்றை யாத்தி
தயவான கழல்கொடியுஞ் செங்கத் தாரி
வானான பெருமரமும் அவுரி இட்டு
வளமாக சமனுக்கி யுலர்த்திக் கொண்டு
பானான குழித் தயிலமாக வாங்கி
பக்குவமாய்த் தானெடுத்து பதனம் பண்ணு
மானான சீவசெந்து வகையைச் சொல்வேன்
மைந்தனே முக்குற கருங்காக மாமே (425)

ஆமேதான் யழுங்கோடு கழுகுஆமை யாந்தை
அடவூ பச்சோந்தி யூங்கூகை தேவாங்கு
தாமேதான் பசுந்தவளைப் பெரு வீரியன்
தயவான மஞூ மண்டைகழுதை மண்டை
போமேதான் மேதிக்கொம்பு பரிகமேழம்பரி னோடு
பொலியானை லத்திமுதல் புழுக்கை தானும்
வாமேதான் ஒட்டகத்தின் லத்தி கூட
வல்பந்திக் கழுதையுட லத்தி தானே (426)

தானப்பா வெள்ளாட்டுப் புழுக்கை யோடு
தயவாக சமன்கொண்டு இடித்து லர்த்தி
பானப்பா குழித் தயிலமாக வாங்கி
பாங்கான இருதயிலஞ் சமனாய்ச் சேர்த்து
கோனப்பா சேங்கொட்டைத் தயிலமரைப் படி
கொற்றவனே தயிலத்தின் கூட வாரு
வானப்பா கருப்பு டையகுங் கிலியம்
வளர்த்திகையின் புட்டுடைய பூச்சி தானே (427)

தானடா கருஞ்சீரகங் கஸ்தூரி மஞ்சள்
தனித்தே தாளிமாசக் காயிரச கற்பூரம்
மானடா செருமரப் பட்டை யோடு
மைந்தனே வகைவகைக்கு பலந்தா னொன்று
வானடா பரங்கிப்பட்டை பிரப்பன் கிழங்கு
வளமாகப் பலம்ரண்டு நிறுத்தப் போட்டு
பானடா வலம்புரிக்காய் கடுக்கா யோடு
பாங்காகப் பலமொன்று நிறுத்தக் கொள்ளே (428)

கொள்ளதான் ஓதியம்பட்டை கொடியின் சாறு
குணமாகச் சரக்கெல்லா மரைத்துப் போடு
அள்ளேதான் மயிலெண்ணெய் வேப்பெண்ணெ யிரண்டும்
அடவான தயிலத்தில் நேரே சேர்த்து
துள்ளேநீ துளாவி மிகப்பதத்தில் காய்ச்சி
சுகமான கணபதிக்குப் பூசை பண்ணு
தெள்ளேதான் துவளையிடு தேக மெங்கும்
தெளிவாக நோய்தீரும் விவரம் பாரே (429)

பாரேதான் கால்முடங்கை முடமுந் தீரும்
பாங்கான சூலையொடு குஷ்ட நோயும்
சேரேதான் புடையன் செவ்வட்டை மரவட்டை
செய்யான வண்டுகடி பிற்லி வஞ்சினையும்
தீரேதான் பூதமுதல் பசாசு வேதாளந்
திறமான பிரம ராட்சதையுங் கூட
வீரேதான் மற்றாநாள் வேது தண்ணீர்
வீரான நோயறிந்த தண்ணீர் வாரே (430)

வாரடா கைப்போடு புளியுகையுந் தவிரு
வளமாவவுப் பைநவிறாம் வருத்தக் கட்டு
பாரடா பசிபயர் கொடிக்காலின் பிஞ்சு
பாங்காக முருங்கையுட பிஞ்சு மாகும்
கூரடா ஆவின்பால் நெய்யு மாகும்
குணமான துவரையுட பருப்பு மாகும்
சீரடா வியாதியுட குறியுங் கண்டு
சிறப்பாக பத்தியத்தை சீராக் கட்டே (431)

விஷங்களுக்கு மெழுகு

கட்டப்பா வரிக்குமட்டிப் பழச்சாறு வாங்கி
குணமாகப் பாண்டத்தில் மைபோல் கிண்டி
மாட்டப்பா சிமிழ்தனிலே யடைத்துக் கொண்டு
மைந்தனே பசும்பயறள ளவாமித் தானும்
மீட்டப்பா நாவுதனில் தடவிப் போடு
மிகுந்ததொரு விஷங்களெல்லா மிறங்கிப் போகும்
ஆட்டப்பா போகருட கடாட்சத் தாலே
அடவாகப் புலிப்பாணி பாடி னேனே (432)

அக்கினி மந்தத்திற்கு லேகியம்

தானேதான் திரிகடுகு ஓமம்வாம் விளங்கம்
தயவாக வகைவகைக்கு விராக னைந்து
போனென்ற பொடிபண்ணி சர்க்கரை நேர்சேர்த்து
பொங்கிய தேன்படிகால் நெய்படிகால் வார்த்து
கோனென்று பிசைந்ததிலே வைத்துக் கொண்டு
குணமாக நெல்லிக் காயளவு கொள்ள
வானென்ற வாயு அக்கினியின் மந்தம்
வாங்குமடா போகருட கடாட்சந் தானே (433)

சுத்தவல்லாதி எண்ணெய்

தாளப்பா சுத்தனுக்கரை வல்லாதி எண்ணெய்
    தயவாக சித்தாமுட்டி மூலத் தோடு
ஆளப்பா பலமது முப்பத்தி ரண்டு
    அடவாகத் தாஷித்து இருநாழி நீரில்
பாளப்பா நாலிலொன்று காய்ச்சி வாங்கி
    பாங்காக ஐந்தெண்ணெயொரு படிதான் பாரு
வாளப்பா கெந்தி அதிமதுரம் கோஷ்டம்
    வளமாக சாதிக்காய் சாதி பத்திரியே (434)

பத்தான ஏலமுட லவங்கப் பட்டை
    பாங்கான அரத்தைசுக்கு அக்கிரா காரம்
முத்தான மாஞ்சில் தாளிசையாம் பத்திரி
    முடுக்கான வாய்விளங்கம் யானைத் திப்பிலி
சித்தான திப்பிலி கடுகு ரோகணியும்
    திருக்கைநீர் வாலின் மிளகு ஓமம்
வித்தான குங்குமப்பூ கருப்புச் சீரகம்
    விதமான கடுக்காயுந் தான்றிக் காயே (435)

ஓஜஜ

காயான சென்பகப்பூ கொத்த மல்லி
    கருவான வாலுழுவை சிறு நாகப்பூ
மாயான செவியமது களஞ்சி நாலு
    மைந்தனே பொடிபண்ணி வெண்ணெயிலே போடு
தாயான பழச்சாறு பசுவின் பாலு
    தயவாக வகைவகைக்கு படிதான் வாரு
சேயான மெழுகு பதந்தனில் வடித்து
    செயமான புழுகுடனே கஸ்தூரி போடே (436)

போடேதான் வகைக்கு வகைகளஞ்சி தானும்
பொங்கமுடன் கணபதிக்கு பூசை பண்ணு
நாடேதான் காசிடைதான் ஒண்ணெய் கொள்ள
நாசியிலே ஒருதுளி மேலே பூச
சாடேதான் முகவாத மண்டை வாதம்
சடிதான பித்தமொடு நீல காசம்
சூடேதான் பீநசமும் வாயு சூலை
சுகமில்லாச் சொரிமுதலாமித் தீரும் பாரே (437)

பாரேநீ மூன்று நாளாறு வேளை
      பாங்காகக் கொள்ளயிலே பத்தியத்தைக் கேளு
சேரேதான் சியக்காய் வெந்நீர் வாரு
      சிறப்பான பசும்பயறு உப்பூந் கூட்டு
தீரேதா நாலாநா ளெல்லாங் கூட்டு
      தீர்க்கமாயிப் படிமூன்று கெடுவே கொள்ளு
வீரேதான் சொன்ன பிணிதீரும் பாரு
      விதமான போகருட கடாட்சந் தானே (438)

ஈளை காசம் பெருமூத்திரத்திரட்சி நீரடைப்பு கிரிச்சினம் பெரும் பாட்டுக்கு லேகியம்

• • • •

தானான வரிக்குமட்டி வேர்பலமும் பத்து
      தயவான கடுக்காய் வேர்நெல்லி வேரும்
மானான தாமிறிக்காய் வேரி னோடு
      மைந்தனே அந்தி மல்லிகையின் வேரும்
கோனான வெட்டிவேர் வில்வ வேரும்
      குணமான விலாமிச்சை நா துவளை நாரி
வானான மாதளைதாங்கி சிறுகாஞ் சோரி
      வளமான நெய்தலொடு செங்கழு நீர்க்கிழங்கே (439)

கிழங்கு காசுமல்லி நிலப்பனையும் வாகை
        கிருபையுடன் கண்டங் கத்திரியின் மூலம்
புளங்கமப்பா வகைவகைக்கு பலந்தா னொன்று
        போட்டிடித்து ஞான் நீரெட் டொன்றாக்கி
விளங்கப்பா பசுவின்பால் படிநால் விட்டு
        விதமான சரக்குவகை சொல்லக் கேளு
முளங்கப்பா சாதிக்காய் சாதி பத்திரி
        முடியான கிராம்பேலம் வாலுடைய மிளகே (440)

மிளகான சிறுலவங்க மந்திஷ்டி கோஷ்டம்
        மிகுந்தநல்ல சந்தனமுங் கரிய சீரம்
அளகான சதகுப்பை வாமி விளங்கம்
        அடவான சாஸ்திரமாம் பேதி யோடு
புளகான தாளிசபத்திரி தேவ தாரம்
        புவித சீரகமிளகு சிறு நாகப்பூ
இளகானி அதிமதுரம் காஞ்சி வியும்
        ஈமவாலு முவைதேக்கு சிங்கி யாமே (441)

ஆமேதான் கஸ்தூரி மஞ்ச ளோடு
        அடவான திப்பிலியுந் திப்பிலியின் மூலம்
போமேதான் ரோகணியும் நெரிஞ்சில் முள்கு
        பொங்கமுடன் குரோசாணி முத்தக் காசு
தாமேதான் கடுக்காயும் நெல்லிக் காயும்
        தயவான குங்குமப்பூ மாதளையின் பிஞ்சு
வாமேதான் வகைவகைக்கு களஞ்சு நாலு
        வளமாகப் பசுவின்பால் தன்னா லாட்டே (442)

ஆட்டியே கியாழமத தன்னித் போட்டு
        அடவாக ஆவின்பால் நெய்ப்படி நாலிட்டு
நாட்டியே செவ்விளநீர் பழச்சாறு தானும்
        நலமான வல்லாரைச் சாறும் கூட
மூட்டியே வகைவகைக்கு படிதான் ரண்டு
        [illegible]
[illegible]
        முசியாத சீனிசு பலந்தான் ரண்டு
கூட்டிடு நல்லவெல்லம் பலந் தானாறு
        கூடவிட்டு மெழுகு பதந்தன்னில் காச்சே (443)

சே
காம்ச்சியே வடிகட்டிக் கலசத்திட்டு
        கணபதிக்குப் பூசைசெய் நெற்புடந்தான் திங்கள்
ஆச்சியே யெருந்தாந் வைத்துக் கொண்டு
        அடவாக முக்கழஞ்சி அந்தி சந்தி
தாச்சியே கொண்டிடவே ஈளை காசம்
        தயவில்லா தலைநடுக்கம் பித்த மேகம்
ஆச்சியே வலிப்பு பொடு கல்லடைப்பு
        அளவில்லா மூத்திரத்தில் கிரிச்சி யோடு
பேச்சியே பெரும்பாடுமே லொழிவு காந்தல்
        பேதமில்லா நீர்ச்சிறுப்பு வாயு போமே (444)

போமடா மலடிக்குப் பிள்ளை யுண்டாம்
    பொங்கிய கைப்புளி தயிரு மாகாத்
வாமடா நெய்விட்டா லெல்லா மாகும்
    வளமான தேகமது காந்தி யுண்டாம்
பாமடா வளபத்பம் நெய்யிற் கட்டி
    பாங்காகக் கொண்டிடவே நோய்க ளெல்லாம்
தாமடா கைகறப்பு மாறிப் போகும்
    தயவான போகருட கடாட்சந் தானே (445)

பீநசத்துக்கு எண்ணெய்

தானப்பா பீநசத்துக் கெண்ணெய் கேளு
தயவாக எள்ளெண்ணெய் படிதான் ரண்டு
வானப்பா கரிசாலை பொன்னாங் காணி
வளமான வெற்றிலை யவுரிமுசு முசுக்கை
மானப்பா மூக்குரட்டை அத்திப் பட்டை
மைந்தனே வகைவகைக்கு படிசார் விட்டு
கோனப்பா ஆதொண்டை இலைச்சார் தானும்
கொற்றவனே படியிரண்ட மூந்து வாரே (446)

வாரப்பா பீநசமாம் பூண்டு மூலம்
வகையுடனே இடித்தசார் படிதா னொன்று
வீரப்பா பசுவின் பாற்படி தானொன்று
வித்தகனே யருப்பேற்றி வேகும் போது
சீரப்பா மிளகுடனே கஸ்தூரி மஞ்சள்
சிறுகடுக்காய் நெல்லிவித்து நிம்ப வித்து
காரப்பா கருஞ்செம்பைப் பூவின் தானும்
கனமான வகைவகைக்கு பலந்தான் வாங்கே (447)

வாங்கியே பொடித்திட்டு முன்னெயிற் றாவி
வகையுடனே மெழுகு பதமான போது
தாங்கியே போகாதே இறக்கிக் கொண்டு
துய்யமிகுங் கணபதியைப் பூசை செய்து
தீங்கில்லா தைலமதை திமு நாளில்
தீவரமாம் மூழ்கிவர தீரும் ரோகம்
ஏங்கியே திரியாதே புளிப்பு கைப்பு
எள்ளெண்ணெய் மாங்கிஷமு மீனா காதே (448)

ஆகாது விடையுங் களாகா தப்பா
அப்பனே வறுத்தஉப்பு துவரை யாகும்
வேகாத பண்டங்க ளொன்று மாகாதே
வெற்றிலை முருங்கை காயவரைப் பிஞ்சும்
நோகாத வழுதலங்காய் வற்ற லாகும்
நோயாளி கண்டறிந்து பத்தியஞ் செய்தால்
போகாத பீநசங்கள் பறந்து போகும்
போகருட கடாட்சத்தால் பாடி னேனே (449)

ஆடியே சிற்றண்ட மெழுகீ தப்பா
அப்பனே சொல்லுகிறேன் வில்வ மூலம்
தேடியே வீசைபத்துக் கொண்டு வந்து
தேர்ந்ததனை நறுக்கியபின் நிறுவ லர்த்தி
வாடியே போகாதே பாண்டத்தி லிட்டு
வாய்மூடி சேலை–செய்து ஒழுத்தைலம் வாங்கி
நீடியே தலைஅண்டம் பீங்கானி லிட்டு
நிலவரமாய் தைலமதை நிறைய வாரே (456)

அண்டமெழுகு

வார்த்தபின்பு நாற்பதுநாள் ரவியில் வைத்து
வற்றவற்ற தைலமதை வார்த்து வந்தால்
பார்த்திருந்தவீ பண்டிதர்கள் மாய மாக
பசுமையுள்ள மெழுகாகும் பகரக் கேளு
ஊர்த்துவந்த வாதமெல்லாந் துலைந்து போகும்
சுண்டைக் காயளவெடுத்து தேனி லுந்தால்
ஆர்த்திருந்த சூலையெல்லாமே மாய்ந்து போகும்
அளவாகப் புலிப்பாணி அரைந்திட் டேனே (457)

இலவணச்செந்தூரம்

அறையுறேன் லவணத்தின் செந்தூரங் கேள்
அப்பனே கல்லுப்பு பலந்தீ தானாலு
கறையுறேன் குதமது பலந்தா னொன்று
கல்வத்தில் தானிட்டு கனிரத்தின் சாற்றால்
மறைய வேதானரைத்து ரெண்டு சாமம்
மார்க்கமாய் குகையில் வைத்துசொல்லக் கேளு
விறையுறேன் போகருட கடாட்சத் தாலே
விபரமுடன் புலிப்பாணி விளம்பக் கேளே (458)

கேளேதான் உலையில்வைத்து பழுக்க ஊத
கிருபையுடன் உருகியது மணி போலாகும்
கோளேதான் வாராமல் ஆற விட்டு
கொற்றவனே கல்வமிட்டு பொடியாமிச் செய்து
நாளேதான் அந்திரத் தாமரையின் சாற்றால்
நால்சாமந் தானரைத்து வில்லை தட்டி
பாளேதான் போகாமல் காய வைத்து
பக்குவமாயிச் சில்லிட்டுப் புடமுறுமு மாமே (459)

ஆமேநீ முன்போலே ஐந்துபுடம் போட்டால்
        அப்பனே செந்தூர மாகும் பாரு
தாமேநீ யெடுத்ததனை சிமிழில் வைத்து
        தயவாக பணவிடைதான் தேனில் கொள்ள
போமேநீ குன்மமென்ற தெட்டுந் தீரும்
        பொல்லாத நெஞ்செரிவு சூலை ரோகம்
வாமேநீ ஊதகத்தின் வாயு தீரும்
        வல்லமையால் புலிப்பாணி வகுத்திட் டேனே (460)

நமனாசமெழுகு

வகுத்திடவே நமனாச மெழுகு தன்னை
　　வளமாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
தொகுத்திடுவேன் லிங்கமொடு தாளக முஞ்சிங்கி
　　சொற்பெரிய மனோசிலையுங் கௌரி வெள்ளை
பகுத்திடுவேன் ஆதங்கெந்தி வீரம் பூரம்
　　பாங்கான அருசியுடன் வகைக்கு தானும்
மகத்திடுவாய் விராகனிடை யொன்றே தானு
　　மாசற்ற வாளமது பதினொன் றாமே (461)

ஆமேதான் சரக்கெல்லாங் கல்வத் திட்டு
　　அப்பனே அன்னக்காடி யினா லரிட்டி
தாமேதான் நாற் சாமமான பிறபு
　　தயவாக முழச்சீலை அதில் பரப்பி
போமேதான் திரித்ததனை காய வைத்து
　　பொங்கமுடன் அவிநெய் பலமெட் டாகும்
தீமேதானில் லையடா சுடர்தயில மாக
　　தீவரமாய் மூன்றுமுறை மடக்கிச் செய்யே (462)

செய்தபின்பு தைலமதை யெடுத்துக் கொண்டு
செப்பரிய பனைவெல்லம் பலமு மூன்று
கொய்தசுக்கு சூடமுமுன் தைலஞ் கூட
கொற்றவனே விராகனிடை சேர்த்து வைத்து
கைதவமாம் சுண்டைக்காய் அளவு கொள்ள
கடத்திலுள்ள வாதமெல்லாஞ் சுதிகெட் டோடும்
பைதமுடன் மாதமொன்றுக் கைந்துநாள் தான்
பக்குவமா யிப்படியே மூன்றுமுறையுந் தானே (463)

தாவாகத் தீருகிற வியாதி கேளு
        தகைமையில்லா குன்மமெட்டுஞ் சூதகத்த வாயு
மாவாகத் திமிர்வாதங் குடலின் வாதம்
        மன்னவ வேப கூமென்ற வாதம் போகும்
வாவாக பத்தியந்தான் சொல்லக் கேளு
        வன்மையுள்ள பசும்பாலும் பசுநெய் யாகும்
தேனாகப் பசும்பயறு வறுத்துப் பாகும்
        தெளிவுடன் பத்தாநாள் விளக்கெண்ணெய் மூழ்கே (464)

மூழ்கிய கின்மறுமுறை பாலம் பெண்ணாகாது
        முக்கிய தொன்றுாறு நாளாகு மட்டும்
மாந்திய போகாதே மனம் விடாதே
        மதிகெட்டு நில்லாதே மருந் தேறாது
காழ்த்த பண்டந் தின்னாதே காலைமாலை
        காலாறநீ நடந்து திரும்ப நன்று
வாழ்த்துவார் போகருட கடாட்சத் தாலே
        வகையாகப் புலிப்பாணி வசனித் தேனே (465)

ஆனைக்கால்_தீரலேகியம்

வசனித்தேன் கருங்குவை மாப்படி கால்தான்
        வகையாகத் திருகள்ளிப் பாலரைக் கால்
நசனித்த பசும்பால் தானரைக் காலாகும்
        நறுத்தேனும் படியரைக்கால் நவிலக் கேளு
தசனித்த மாதனிலே கலந்து கொண்டு
        தயவாக அடுப்பேற்றி லேகியமாக் கிண்டி
அசனித்த ஆறவிட்டு கல்லி லாட்டி
        அப்பனே கலசமதில் பதனம் பண்ணே (466)

பண்ணப்பா கழற்றிக் காயவைாமிக் கொள்ளு
பக்குவமா யைந்து திவமிரு நேரந்தாள்
நண்ணப்பா இம்முறையாய் மூன்று மாதம்
நல்மையுடன் கொள்வதற்கு பத்தியங் கேள்
உண்ணப்பா நெய்பால் பசும்பய றாகும்
உத்தமனே வறுத்தவுப்பு மிகவு மாகும்
கண்ணப்பா மறுபத்தியமிருந்து விளக்கெண்ணை மூழ்கு
கருணையுள்ள போகருட கடாட்சந் தானே (467)

அர்த்தனாதி சுரமாத்திரை

தாவென்ற அர்த்தனாதி மாத்திரையைச் சொல்வேன்
தனிவெள்ளைப்பூசு பா ஷாணம் விராக னொன்று
கோவென்ற கோரோசனை விராக னொன்று
கொற்றவனே நீ முலைப்பாலால் சாம மாட்டி
பாவென்ற பசும்பயர் போலுண்டை செய்து
பக்குவமாய் வலமுலைப் பால்தன்னி லீய
வாவென்ற போகருட கடாட்சந் தாலே
வன்மையுள்ள சுரம் நீங்கிஅர்த்த மாமே (468)

அர்த்தமென்ற இடமுலைப்பால் தன்னி வீந்தால்
அப்பனே இடபுறத்து சுரம்நீங்கி யொருபுறமாய் நிற்கும்
வர்த்தமென்ற இருமுலைப்பால் தன்னி வீந்தால்
வகைகெட்டு சுரமது தானுடனே நிற்கும்
கர்த்தனே உனைத்துதித்த லோக மெல்கும்
கால்விழுந்து கும்பிடுவார் கதிதா வென்று
விர்த்தனென்ற போகருட கடாட்சத் தாலே
விபரமுடன் புலிப்பாணி விரித்த தாமே (469)

அமிர்தசஞ்சீவி மாத்திரை

ஆமென்ற அமிர்தசஞ் சீவி மாத்திரை
    அடவாகச் சொல்லு கிறேனப்பா கேளு
தாமென்ற சாஸ்திர பேதி யேலந்
    தவிகோ ஷ்டம் கிராம்புடனே சாதி பத்திரி
காமென்ற சந்தனமுங் கடுகு ரோகணி
    கனைதுப்பைப்பூ நன்னாரி விலாமிச்ச வேர்
வாமென்ற இருவேலி கடுக்காய் தான்றி
    வற்றல் நெல்லிதிப்பிலியு மதுர மாமே (470)

மதுரமென்ற திராட்சமொடு முத்தக் காசு
    மைந்தனே பேரீச்சங் காய் வகைக்கு
சதுரமென்ற விராகனெடை நிறுத்துக் கொண்டு
    சலியாமல் கல்வமிட்டு பழச்சாற் றாலே
அதிரம் போலரைத்திடுவாய் சாமம் நாலு
    அப்பனே கடலைப் போலுண்டை செய்து
நதிவரண்டு சுரமிஞ்சி யதன மாகால்
    நல் முலைப்பால் வெந்நீரிலிய நன்றே (471)

நன்றாகுஞ் சன்னிமுதல் தோஷ மெல்லாம்
நன்மையாம் பிள்ளைபிணி நலியுந் தீரும்
பன்றாகும் நாவரட்சி பறக்கும் பாரு
பரிதிகண்ட பனிபோலாம் நசவுவி ளோர்க்கு
கன்றாத பத்தியமாரிக் காரு தாரு
கதிகெட்டால் வியாதியது தீகதித்தக் கொல்லும்
குன்றாகும் போகருட கடாட்சத் தாலே
ஞாமாகப் புலிப்பாணி கூறி னேனே (472)

அக்கரசஞ்சீவி மாத்திரை

கூறுவேன் அக்கரசஞ் சீவி மாத்திரை
குணம்பெறவே சொல்லுகிறேன் குறிப்பாய் கேளு
கோறுகிறேன் அதிமதுரம் கோஷ்டம சுக்கு
குணமுள்ள சாதிக்காய் கொடுக்காய் சீரம்
கூறுகிற லவங்கப்பட்டை திப்பிலி மூலம்
உத்தமனே கடுக்காயும் அசம தாகம்
தேறுவேன் கொத்தமல்லி கஸ்தூரி மஞ்சள்
திறமுள்ள பழம்புளியுஞ் சீனி காயே (473)

காணவே அரத்தைரண்டு இந்துப் போடு
கருஞ்சீரகம் வகைவகைக்கு விராக னொன்று
தோணவே முலைப் பாலாலிரண்டு சாமம்
தொகுத்திட வேதானரைத்து துவரைபோல
மாணவே உண்டைசெய்து நிழலு லர்த்தி
மைந்தனே குப்பியிலே யடைத்துக் கொண்டு
நாணவே நாவரட்சை நங்கை தோஷம்
நலமில்லா சன்னிமுதல் சுரங்கள் போமே (474)

போகுமே முலைப்பாலிற் கொடுக்க நன்று
புனிதமுள்ள அனுபானந் தன்னி லீவாய்
ஆகுமே பிள்ளைப்பிணி அனைத்தும் போகும்
அப்பனே பத்தியமாயிரு மிருக்கச் செய்து
பாகமாயேழு நாள்இறை கொடுக்கவே பின்னர்
பாலகனே மழுவாரம் நீரை வாரு
சோகமாய் வியாதிகண்டு மருந்தை யீவாய்
சொற்பெரிய போகருட கடாட்சந் தானே (475)

பிள்ளைகட்குபேதிமாத்திரை

தானென்ற பிள்ளைகட்கு விரோசனந் தான்
தயவாகச் சொல்லுகிறேன் லவங்க மேலும்
மானென்ற சன்னபட்டை மதுரங் கோஷ்டம்
மைந்தனே சன்பகத்தின் மொட்டுத் தானும்
வானென்ற விராகனெடை நிறுத்துக் கொண்டு
வாளமது சுத்திசெய்து விராக னொன்று
தேனென்ற பழச்சாற்றால் மூன்று சாமம்
தெளிவாகத் தானரைத்துச் செப்பக் கேளே (476)

கேளப்பா மிளகதுபோல் குளிகை செய்து
கெடியாக நிழலுலர்த்தி சிமிழில் வைத்து
கோளப்பா இல்லையடா சர்க்கரையோதல்
கொன்றவனே நல்லவெல்லம் கதலி தன்னில்
நாளப்பா பிள்ளைபல மறிந்து நீயும்
நன்மணி யிலொன்றிரண்டு நல்கிடப் பின்
ஆளப்பா மிளகுநீர் சாத மீவாய்
அந்தியிலே சுக்கு சீரகமு மாமே (477)

கட்டுவாதி மாத்திரை

ஆமேதான் வாழய்ட்டு கொடுப்பா யப்பா
அசையுதேன் கட்டுவாதி தன்னைக் கேளு
தாமேதான் சாதிக்காய் சாதிப் பத்திரி
தகமையுள்ள மாசிக்காய் கடுக்காய் பூவும்
நாமேதான் சீரகமும் விடயங் கிராம்பு
நலமுள்ள வெந்தயமும் அபினி தானும்
கோமேதான் குக்குலு கசகசாவும் கோரோசனை யும்
கொற்றவனே விராகனெடை நிறுத்த வாங்கே (478)

வாங்கியே முலைப்பாலால் அரைத்து நீயும்
வன்மையுள்ள மிளகது போலுண்டை செய்து
தாங்கியே நிழலுலர்த்தி பதனம் பண்ணு
தாரணியில் கிராணிவகை எல்லாம் போக
ஓங்கியே தேனதிலும் வெண்ணெயிலுங் கொள்ள
ஓடிவிடும் பேதிமுதல் தத்தக் கிராணி
தீங்கில்லாப் போகருட கடாட்சத் தாலே
திறமாகப் புலிப்பாணி திறஞ்சொன் னேனே (479)

பச்சைக்கற்பூர மாத்திரை

சொன்னதொரு பச்சைக் கற்பூர மாத்திரை
சொல்லுகிறேன் பச்சையென்ற கற்பூரந் தான்
மன்னென்ற வீரமுடன் பூரம் லிங்கம்
மைந்தனே சூதமுடன் ரசசெந் தூரம்
வின்னமில்லா சுத்திசெய்து வகை வகைக்கு
விராக னெடைதானெடுத்து கல்வத் திட்டு
அன்னநடை மின்னார்கள் காமப் பாலால்
அப்பனே நாற்சாம மரைத்து வாங்கே (480)

வாங்கியே குன்றிமணி போலுருட்டி
வன்மையுட நிழலுலர்த்தி வரிசை கேளு
தீங்குற்ற சூலைதிரி கிரத்தி தோஷம்
தின்றிடவே எழுநாளில் தீர்ந்து போகும்
ஓங்கியே வந்துற்ற சன்னி யோடும்
ஒருநொடியில் சூடெழுந்து ஓங்கி நிற்கும்
பாங்குற்ற பத்தியங் களிச்சா பத்தியம்
பன்பான போகருட கடாட்சந் தானே (481)

இரத்தகொட்டலுக்கும் சீதபேதிக்கும் சூரணம்

அருகுவேள் கற்கடக சிங்கி யப்பா
அடவான சிராம்புடனே கருவாப் பட்டை
உருளவே பிரட்டி சிறுவரப்ப தாக்கி
உத்தமனே வகைவகைக்கு விராக னொன்று
மருளவே சூரணிறு மைந்தா கேளு
மயக்கமில்லை ஆறுபங்காம் செய்து கொண்டு
குருவான போகரை நீதொழுது யேத்தி
கொடுத்துவிடு வெண்ணெயிலே குலைந்து போமே (484]

குழந்தைகட்கு சுரமுதலிய தோஷங்களுக்கு அமிர்தசஞ்சீவிக்குளிகை

• • • •

போமேதான் அமிர்தமென்ற குளிகை சொல்வேன்
புகழுங்கோ ரோசனையும் யேலந் தானும்
தாமேதான் அதிமதுரம் சண்பகப் பூ
தலையான சாஸ்திரமாம் பேதி யோடு
நாமேதான் வகைவகைக்கு விராகனொன்று
நலம்பெறவே கல்வத்தில் நன்றா யாட்டி
ஆமேதான் வெட்டிவேர் விலாமிச்சை வேரும்
அடவாகக் கியாழமிட்டு அரைத்தி டாயே (485)

அரைத்திடு வாயிரு சாமமான பின்பு
அப்பனே குன்றியைப் போலுண்டை செய்து
நிரைத்தமைமாய் நிழலுலர்த்தி நினைவாய்க் கேளு
நீமகனே முலைப்பாலில் தணுக்கி வைக்கல்
உரைத்த வந்தமாந்த மெட்டுநீர்ப்படு வற்றால்
உத்தமனே அஸ்திசுரம் வெப்புந் தீரும்
மறைபுகழும் போகருட கடாட்சத் தாலே
மகிழ்வாகப் புலிப்பாணி மனம் விட்டேனே (486)

சிறுபிள்ளைகளுக்கு காதில்சீழ் சீழ்வடிகிறதற்கு ரவி தயிலம்

• • • • •

விட்டதோர் பால்நண்டு விராகன் பத்து
    வெள்ளுள்ளி குளவிந்தம் விராக னைந்து
திட்டமுள வெள்ளைக் காக்கணஞ் சாற்றாலே
    திறமாகத் தானரைத்து தேங்காய் நெய்யில்
சட்டமுடன் தான்பிசைந்து ரவியில் வைத்து
    சாதகமாய் மூன்று நாளான பின்பு
இட்டமுடன் வடிகட்டி யெடுத்துக் கொண்டு
    என்மகனே செவியிலிட சீழ்தான் போமே (487)

சிறுபிள்ளைகள் பெருக்கநெய்

தானென்ற தேராத பிள்ளை கட்கு
    தயவாகச் சொல்லுகிறேன் தண்ணீர் விட்டான்
மானென்ற சாறுபென் மறியின் பாலும்
    மைந்தனே ஆவின்பால் தேங்காய்ப் பாலும்
தேனென்ற ஆவிநெய் திறமாய் வாங்கி
    தேசிகனே வகைவகைக்கு படி காலப்பா
கோனென்ற சீனியது கற்கண் டோடு
    கொற்றவனே பலமைந்து கொண்டு சேரே (488)

சேர்த்தபின்பு அடுப்பேற்றி தீயை மூட்டு
சிறுக எரிமெழுகு பதம்சிவக்கும் போது
கோத்தெடுத்து வடிகட்டிக் கொண்டு தானும்
கொற்றவனே கரண்டிவீதம் கொடுத்தா யானால்
கார்த்திருந்த கணம்நீங்கி கரும்பு போலாம்
கட்டழகும் பிள்ளைக்கு களையு முண்டாம்
பூத்தமறை போகருட கடாட்சத் தாலே
புலிப்பாணி புவிதனிலே புட்டி னேனே (489)

குழந்தைகட்கு வாந்திகண்டால்

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்தி கண்டால்
　　பூவென்ற கிராம்பு மதிவிடையம் திப்பிலி
நாட்டுகிறேன் மயிலிறகு சுட்ட சாம்பல்
　　நன்றாகப் பொடிசெய்து தேனில் சேர்த்து
ஊட்டவே வாந்தியது ஒழிந்து போகும்
　　உண்மையிது தவறாது உறுதி மெத்த
ஆட்டமிகும் போகருட கடாட்சந் தாலே
　　அன்பாகப் புலிப்பாணி அறைந்திட் டேனே (490)

குழந்தைகள் சிரங்குக்கு

அறையுறேனின்ன மொரு யெண்ணெ யப்பா
　　அலம்மீறி குழந்தைகட்கு அங்க மெல்லாம்
நிறையவே சொறிசிரங்கு நின்ற தானால்
　　நிலவர மாயாமணக் கெண்ணெ யோடு
மறையான மேனியுடன் மணித் தக்காளி
　　மைந்தனே முடக்கற்றான் வகை படிகால்
குறையாமல் மூக்குரட்டை யரைத்த சாந்து
　　கூட்டிடுவா யெலுமிச்சம் பழத்தின் வாறே (491)

செய்முறை

வாறாகக் காச்சி வடித்தெடுத்துக் கொண்டு
        வகையாகக் கரண்டி முறைகொடுப் பாயப்பா
நேராகப் பத்தியந் தானிச்சா பத்தியம்
        நிச்சயமா யைந்து நாளேழு நாளாம்
சீராகத் தலைமுழுகி வருவா ராகில்
        சிறுசிரங்கும் பெருசிரங்கும் நில்லா தோடும்
பேராகப் போகருட கடாட்சத் தாலே
        பேசினேன் புலிப்பாணி பேசி னேனே (492)

சிரங்குக்கு மேல்பூசுந்தயிலம்

பேசுகிறேன் மேல்பூசுந் தயில மொன்று
பெரியாம் பல்கிழங்குடனே செங்கத் தாரி
மாசறவே யிடைக்கிடை தாவெடுத்துக் கொண்டு
மைந்தனே அவுரிச்சார் தன்ன லாட்டி
நாகமென்று நிம்பயெண்ணெய் தன்னில் கட்டி
நான்கு நாள்பூசி வரசிரங்கு போகும்
தேசிகனார் போகருட கடாட்சத் தாலே
தெளிவாகப் புலிப்பாணி பாடி னேனே (493)

பிள்ளைப்பெறமாட்டாதவர்க்கு

பாடியே பிள்ளை வெளிகாணாத பேர்க்கு
பஞ்பான கிழக்காய் நெல்லி மூலம்
வாடியே போகாமல் வளைய மாடி
வசமான இடக்கால் பெருவிரலில் போட
நீடியே பிள்ளை வெளிகாணு மப்பா
நிலைவாக இன்னமொரு வேரைக் கேளு
சூடியே முன்னைவேர் தனை யெடுத்து
சுரபியெனும் பசுவின்பால் தன்னி லரைத்தே (494)

அரைத்தெடுத்து உள்ளுக்கு கொடுத்தால் பிள்ளை
அப்பனே கீழ்விழுந்து அழுகும் பாரு
மறைத்த பொருளென்று நீ மயங்க வேண்டாம்
மகாகோடி புண்ணியங் கிளைக்குண் டாகும்
துரைத்தனமாய் நீயலைந்து திரிய வேண்டாம்
துய்யமெனும் சால்களெலாந் துணிந்து பாரு
உரைத்த குருபோகருட கடாட்சத் தாலே
உரைத்திட்டேன் புலிப்பாணி யுலகில் தானே (495)

கற்றாழை நாற்றந்தீர கட்டு

உலகினிலே மானிடர்க்கு கற்றாழை நாற்றம்
ஓடிவிட சாற்றினாற்று உரைக்கக் கேளு
நல்நாரி கரந்தை யுடவேருங் கூட
நன்னாரி வேருடனே முத்தக் காசும்
குலவிலகுங் கஸ்தூரி மஞ்சள் தானும்
கூட்டியே வகைவகைக்கு விராக னைந்து
கலசமிலே யரைத்ததனை முகட்டில் பூச
கண்டோடும் கற்றாழை நாற்ற மென்னே (496)

தலைப்பேனுக்குமாரணம்

என்னவே தலையிலுள்ள பேன்கள் சாக
எடுத்துரைப்பேன் சூதமொரு களஞ்சு வாங்கி
நன்னவே மேனியுஞ் சார்விட்டு ஆட்டி
நன்னாவில் தான்பிரட்டி நவிலக் கேளு
தின்னவே சிகையில் சிக்கநீபோதி சொருகு
சிரசிலுள்ள பேன்களெல்லாஞ் செத்துப் போகும்
கன்னவே போகருட கடாட்சத் தாலே
கலையறிந்த புலிப்பாணி காட்டி னேனே (491)

முப்பூசேர்த்த செநீ

காட்டினேன் முப்பூவே கலனில் லாமல்
கண்டறிந்து செயிதொழிலில் கலந்து கொள்ள
நாட்டினேன் கவடொன்று மில்லை யப்பா
நன்மையுடன் நீயாட நாதனென் பார்
[illegible]டிவேன் கெவன முதலிதிலே யாகும்
[illegible]
புவியனே வாதமொடு வயித்திய மாட
காட்டினேன் போகருட கடாட்சத் தாலே
கனமாகப் புலிப்பாணி கலையில் தானே (498)

நூல்விவரம்

கலையிலே பதினாறும் இருபத் தைந்தும்
களபான வைம்பது நாளும் பாரு
நிலையிலே சண்முகத்தில் பூசை மார்க்கம்
நீமனே சாலப்பரு நாளும் பாரு
மலையிலே பலதிரட்டு முந்நூ றப்பா
மைந்தனே சோதிட முமுந் நூறப்பா
குலையிலே கொக்கோக முந்நூ று தானும்
குருவான போகருட கடாட்சமு மாமே (499)

வயித்தியர்க்கு புத்தி கூறல்

ஆமேதான் பண்டிதரே அறையக் கேளு
ஆதரையி லெழுச்சியார்க்கு அவிழ்த மீந்து
தாமேதானன்ன மிட்டு வஸ்திர மீந்து
தயவாகத் தன்னுயிர் போலவரைக் காத்து
தீமேதாய் சேராமல் புண்ணிய வானாய்
தீர்க்கமுள்ள வயித்தியனாய் இருந்து வாழ்வாய்
நாமேதான் போகருட கடாட்சத் தாலே
நலமாகப் புலிப்பாணி நவின்றிட் டோமே (500)

வியாதியஸ்தருக்குப் புத்திகூறல்

நவின்றிட்டோம் பூவிதனிலே வைத்திய மார்க்கம்
நன்றாகச் சொல்லி வைத்தேனினால் வேண்டும்
பவின்றிட்ட நோயாளர் வியாதி போக்கிலு
பண்பாக தொழுதேந்தி தாம்பூல மீந்து
இவின்றிட்ட மவையெல்லாம் வர்க்குச் சொல்லி
இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தம் கொள்வாய்
கவின்றிட்ட போகருட கடாட்சத் தாலே
காசினியில் புலிப்பாணி பன்னூறு முற்றே (501)